# தினபூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 271 ஆனி 25

TN-TVL/25/2012-2014

நெல்லை, புதன், ஜூலை 09, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**அமைதிக்கான நோபல் பரிசுக்கு அதிபர் ட்ரம்ப் தகுதியானவர்: இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு**

...2-ம் பக்கம்

**அகமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்து: முதல்கட்ட விசாரணை அறிக்கை தாக்கல்**

...3-ம் பக்கம்

**3-வது இடத்துக்கு சரிந்த சி.எஸ்.கே.: ஐ.பி.எல். பிராண்ட் மதிப்பில் ஆர்.சி.பி. அணிக்கு முதலிடம்**

...6-ம் பக்கம்






சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று திராவிட முன்னேற்ற கழக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார்.

### அரசு முறை பயணமாக இன்று

## முதல்வர் ஸ்டாலின் திருவாரூர் பயணம்

சென்னை, ஜூலை 08-

**முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்றும், நாளையும் (9 மற்றும் 10-ம் தேதிகளில்) திருவாரூர் மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொண்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். மேலும் திருவாரூர் ரயில் நிலையம் ரவுண்டானா அருகே அமைக்கப்பட்டுள்ள கருணாநிதி சிலையை திறந்து வைக்கிறார்.**

இதற்காக இன்று காலை அவர் சென்னையில் இருந்து விமானம் மூலமாக புறப்பட்டு திருச்சி செல்கிறார். அங்கிருந்து சாலை மார்க்கமாக திருவாரூர் செல்லும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அங்கு கலைஞர் கோட்டத்தில் ஓய்வெடுக்கிறார். மாலை அங்கிருந்து புறப்பட்டு காட்டூர் செல்லும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அங்கு அவருடைய பாட்டி அஞ்சுகம் நினைவகத்தில் மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்.

பின்னர், அங்கிருந்து புறப்பட்டு திருவாரூர் ரயில் நிலையம் ரவுண்டானா அருகே அமைக்கப்பட்டுள்ள கருணாநிதி சிலையை திறந்து வைக்கிறார். இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள செல்லும் முதலமைச்சருக்கு வழி நெடுகிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. அங்கு நடைபெறும் ரோடு ஷோ நிகழ்ச்சியிலும் முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் நடந்து சென்று அவர்களின் வரவேற்பை ஏற்றுக் கொள்கிறார்.

இன்று இரவு திருவாரூரில் தங்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின் நாளை (10-ம் தேதி) காலை திருவாரூர் புதிய பஸ் நிலையம் அருகே நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொண்டு ஆயிரக்கணக்கான பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைக்கிறார். இந்த நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு திருவாரூரில் இருந்து சாலை மார்க்கமாக திருச்சி விமான நிலையம் செல்லும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து விமானம் மூலம் சென்னை திரும்புகிறார்.

## ஜூலை 18-ல் தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம்

சென்னை, ஜூலை 09-

**பாராளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில் அது குறித்து ஆலோசிக்க வரும் 18-ம் தேதி அன்று மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மக்களவை, மாநிலங்களவை எம்.பி.க்கள் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

பாராளுமன்ற மழைக் கால கூட்டத் தொடர் ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 21 வரை நடைபெறவுள்ளது. சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆகஸ்ட் 13, 14-ல் மட்டும் பாராளுமன்றத்தில் பணிகள் நடைபெறாது என்று பாராளுமன்ற வி வகாரத்துறை அமைச்சர் கிரிண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

கூட்டத்தொடரை ஆகஸ்ட் 12-ம் தேதியுடன் முடிக்க ஏற்கெனவே திட்டமிடப்பட்டது. தற்போது ஆகஸ்ட் 21 வரை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு மாதம் நடைபெறும் இந்த நீண்ட கூட்டத் தொடரில் பல முக்கிய மசோதாக்களை அறிமுகம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்கு பிறகு, முதல்முறையாக பாராளுமன்றம் கூடுவதால், அந்த நடவடிக்கை குறித்தும், இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் தலையீடு குறித் தும் விவாதம் நடைபெறும் எனத் தெரிகிறது. கூட்டத்தொடர் தொடர்பான அனைத்துக் கட்சி ஆலோசனை கூட்டம் வரும் 19-ம் தேதி நடைபெற உள்ளது. இந்நிலையில், பாராளுமன்ற கூட்டத்தொடர் குறித்து ஆலோசிக்க தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம் ஜூலை 18 காலை 10.30 மணியளவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 18-07-2025 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். நடைபெற உள்ள பாராளுமன்ற கூட்டத் தொடர் குறித்து அந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்." என்று தெரிவித்துள்ளார்.

### காவலாளி அஜித்குமார் உயிரிழந்த வழக்கில்

## ஆகஸ்ட் 20-க்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்

### சி.பி.ஐ.க்கு ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவு

மதுரை, ஜூலை 09-

**போலீஸ் காவலில் அஜித்குமார் உயிரிழந்த வழக்கில் ஆகஸ்ட் 20-ம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று சி.பி.ஐ.க்கு ஐகோர்ட் கிளை உத்தர விட்டுள்ளது. மேலும், இந்த வழக்குடன் அஜித் குமார் மீதான திருட்டு வழக்கையும் சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள காளி கோயில் காவலாளி நகை திருட்டு குற்றச்சாட்டின் பேரில் தனிப்படை காவலர்களால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் குறித்து உயர்நீதிமன்ற மதுரை அமர்வு, மதுரை மாவட்ட நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷை விசாரணை அதிகாரியாக நியமனம் செய்தது. இந்நிலையில் இந்த விசாரணையின் இடைக்கால அறிக்கையை விசாரணை அதிகாரி நேற்று (ஜூலை 8) நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஹென்றி திபேன், நேற்றைய உயர்நீதிமன்ற விவாதம் குறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், "சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கப்பட்ட ஸ்டெர்லைட் வழக்கு நேற்று ஏழாவது ஆண்டை தொட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. அதே போன்றுதான் சாத்தான்குளம் வழக்கு. ஆகையால், தமிழகத்தில் உள்ள நேர்மையான காவல்துறை அதிகாரிகளை கொண்டு இந்த விசாரணை மேற்கொள்ளலாம் என நாங்கள் நீதிமன்றத்தில் தெரிவித்தோம்.

சி.பி.ஐ. விசாரணையில் நீதிமன்றம் உறுதியாக இருந்தாலும், வருகின்ற ஆகஸ்ட் 20 ஆம் தேதிக்குள் சி.பி.ஐ. விசாரணையின் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட அஜித்குமாரின் குடும்பத்திற்கு அனைத்து நிவாரணங்களும் வழங்க வேண்டும். அதே நேரம், இதே வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளோம்" என்றார்.

முன்னதாக இந்த வழக்கில் நீதிபதிகள் தெரிவித்ததாவது., "மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் காவல் மரணம் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி அரசு உத்தரவிட்டுள்ளது. சி.பி.ஐ. காவல் மரணம் வழக்குடன் அஜித்குமார் மீதான திருட்டு வழக்கையும் சேர்த்து விசாரிக்க வேண்டும். இந்த வழக்குகளை விசாரிக்கும் விசாரணை அதிகாரி மற்றும் விசாரணை குழுவில் இடம் பெறும் சி.பி.ஐ. காவலர்களையும் சி.பி.ஐ. இயக்குநர் ஒரு வாரத்தில் நியமிக்க வேண்டும். அஜித்குமாரின் முழுமையான பிரேதப் பரிசோதனை அறிக்கையை நீதித்துறை நடுவர் மன்றத்தில் ஒரு வாரத்தில் போலீஸார் தாக்கல் செய்ய வேண்டும்.

சி.பி.ஐ. விசாரணை அதிகாரி அஜித்குமார் வழக்கு தொடர்பான மாவட்ட நீதிபதி அறிக்கை மற்றும் அனைத்து ஆவணங்களையும், தடயங்களையும் உயர் நீதிமன்ற பதிவாளர் ஜெனரலிடம் பெற்றுக் கொள்ள வேண்டும். சி.பி.ஐ. விசாரணை அதிகாரி உடனடியாக விசாரணை தொடங்கி ஆக.20-க்குள் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும். சி.பி.ஐ. விசாரணைக்கு தேவையான அனைத்து வசதிகள் மற்றும் ஒத்துழைப்பை தென் மண்டல ஐஜி, மதுரை, சிவகங்கை மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் வழங்க வேண்டும். வழக்கின் அனைத்து சாட்சிகளுக்கும் சாட்சிகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்." என உத்தரவிட்டனர்.

### கடலூர்-செம்மங்குப்பம் அருகே சோகம்: ரயில்வே கேட்டை கடக்க முயன்றபோது

# பள்ளி வேன் மீது ரயில் மோதிய விபத்தில் 3 மாணவர்கள் பலி

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்-நிவாரணம் அறிவிப்பு



விபத்தில் அப்பளம் போல் நொறுங்கி கிடக்கும் வேன்

கடலூர், ஜூலை 09-

**கடலூர் மாவட்டம் செம்மங்குப்பம் அருகே நேற்று ரயில்வே கேட்டை கடக்க முயன்ற பள்ளி வேன் மீது ரயில் மோதிய கோர விபத்தில் 3 மாணவர்கள் பலியான சம்பவம் அங்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இறந்த மாணவர்களின் குடும்பத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரணம் அறிவித்துள்ளார்.**

**கோர விபத்து...**


கடலூரில் செம்மங்குப்பம் அருகே பள்ளி வேன் ஒன்று குழந்தைகளை ஏற்றி கொண்டு இன்று காலை சென்று கொண்டிருந்தது. அப்போது, வழியில் ரயில்வே கேட் ஒன்று இருந்தது. அதன் வழியே அந்த பள்ளி வேன் கடந்து செல்ல முயன்றது. இந்நிலையில், பள்ளி வேன் சென்றபோது, அந்த பகுதியின் வழியே சிதம்பரம் நோக்கி ரயில் ஒன்று சென்றது. அது பள்ளி வேன் மீது மோதி கோர விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில், வேன் பல மீட்டர் தூரத்திற்கு இழுத்து செல்லப்பட்டது. இதில் வேனில் இருந்த குழந்தைகள் தூக்கி வீசப்பட்டனர்.

**முதற்கட்ட தகவல்....**

இதுபற்றி தகவல் அறிந்து, அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி சென்று அவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். போலீசாருக்கும், ஆம்புலன்சுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த சம்பவத்தில், ஒரு மாணவர், ஒரு மாணவி என 2 பேர் பலியானதாக முதற்கட்ட தகவல் வெளியாகி இருந்தது. வேன் டிரைவர் மற்றும் பள்ளி குழந்தைகள் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**விபத்திற்கு காரணம்...**

இந்த விபத்தின்போது, ரயில்வே கேட் மூடப்படாமல் இருந்துள்ளது. ரயில்வே



கைது செய்யப்பட்ட கேட் கீப்பர்

கேட் கீப்பர், கேட்டை மூடவில்லை என கூறப்படுகிறது. அவர் பணியின்போது தூங்கியதில் ரயில் வரும்போது கேட் மூடாமல் விடப்பட்டதே இந்த விபத்திற்கான முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. இதனை தொடர்ந்து, ரயில்வே கேட் கீப்பர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து இந்த சம்பவம் பற்றி ரயில்வே தரப்பில் இருந்து விளக்கம் அளிக்கப்பட்டது. அதில், ரயில்வே கேட்டை திறக்கும்படி கேட் கீப்பரிடம் வேன் டிரைவர் வலியுறுத்தினார். வேன் போகும் வரை கேட்டை மூட வேண்டாம் என அவர் கூறினார் என தெரிவிக்கப்பட்டது.

**மாறுபட்ட விளக்கம்...**

மேலும், நேற்று காலை சுமார் 7.45 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்தது. கேட் கீப்பர் கேட்டை மூட தொடங்கிய போது வேன் டிரைவர் வேனை வேகமாக இயக்கியதால் விபத்து ஏற்பட்டது. சம்பந்தப்பட்ட ரயில்வே கேட் இன்டர்லாக் செய்யப்படாத கேட். கேட் கீப்பர் முறையாக மேனுவலாக கேட்டை மூட முயற்சித்துள்ளார். இதேபோன்று கேட்டை பாதி மூடி கொண்டிருக்கும்போது, வேன் டிரைவர் உள்ளே சென்றார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. கேட் கீப்பர் பணியின்போது தூங்கியதே விபத்துக்கான காரணம் என பொதுமக்கள் கூறியநிலையில், ரயில்வே மாறுபட்ட விளக்கம் அளித்தது.

**சஸ்பெண்ட் நடவடிக்கை...**

இந்நிலையில் பள்ளி வேன் மீது ரயில் மோதிய விபத்தில் அலட்சியமாக செயல்பட்டதாக கேட் கீப்பர் பங்கஜ் சர்மா சஸ்பெண்ட் செய்யப்பட்டார். விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வரும் நிலையில் செம்மங்குப்பம் பகுதியில் பணியாற்றிய கேட் கீப்பர் மீது ரயில்வே அதிகாரிகள் இந்த சஸ்பெண்ட் நடவடிக்கை எடுத்துள்ளனர். தற்போது இந்த சம்பவம் தொடர்பாக கேட் கீப்பர் பங்கஜ் சர்மாவை போலீசார்

(கடைசி பக்கம் பார்க்க)

## பேருந்துகள் வழக்கம்போல் இன்று இயங்கும்: அமைச்சர்

சென்னை, ஜூலை 09-

**இன்று பேருந்துகள் வழக்கம்போல் இயங்கும் என்று அமைச்சர் சிவசங்கர் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை, உள்ளிட்ட 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சங்கங்கள் சார்பில் இன்று அகில இந்திய அளவில் வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் தொழிற்சங்கங்கள் பேருந்துகளை நிறுத்த உள்ளதாக போவதாக அறிவித்துள்ளன. போராட்ட அறிவிப்பால் இன்று எந்த தங்கு தடையும் இன்றி பொதுமக்களுக்கான பேருந்து சேவை இயங்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### காவலாளி அஜித்குமார் வழக்கு:

## விசாரணை அறிக்கை தாக்கல்

மதுரை, ஜூலை 09-

**மடப்புரம் அஜித்குமார் கொலை வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கையை மதுரை மாவட்ட நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ், ஐகோர்ட்டு மதுரை கிளையில் தாக்கல் செய்துள்ளார்.**


சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்திரகாளியம்மன் கோவிலில் தரிசனம் செய்ய வந்த நிகிதா என்ற பெண், கோவில் காவலாளி அஜித்குமார் மீது நகை திருட்டு புகார் அளித்தார். அதன்பேரில் விசாரணைக்கு அஜித்குமாரை அழைத்துச் சென்ற போலீசார், அவரை 2 நாள் சட்டவிரோத காவலில் அடைத்து வைத்து கொடூரமாக தாக்கினர். இதில் அவர் படுகாயம் அடைந்து பரிதாபமாக இறந்துவிட்டார். இதுகுறித்த வழக்கை சி.பி.ஐ. வசம் ஒப்படைத்து தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது.

இந்த சூழலில் மதுரை திருநகரைச் சேர்ந்த மகாராஜன் என்பவர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், மனித உரிமைக்கு எதிரான சட்டவிரோத காவல் மரணங்களை தடுக்க உரிய வழிகாட்டு நெறிமுறைகளை பிறப்பிக்க வேண்டும். அஜித்குமார் இறப்பின் உண்மைகளை மறைக்க முயற்சி செய்து வருபவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்" என்று அந்த மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப் பி ர ம ணி யம், மரியா கிளாட் ஆகியோர் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், அஜித்குமார் மரணம் தொடர்பான அனைத்து வழக்குகளும் நாளை (அதாவது நேற்று) விசாரணைக்கு வருகின்றன. அந்த வழக்குகளுடன் இந்த மனுவையும் சேர்த்து விசாரிக்கப்படும் என தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் மடப்புரம் அஜித்குமார் கொலை வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கையை மதுரை மாவட்ட நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ், ஐகோர்ட்டு மதுரை கிளையில் தாக்கல் செய்துள்ளார். டி.ஜி.பி. தரப்பிலும் நிலை அறிக்கை தாக்கல் செய்ய உள்ளதாக ஐகோர்ட் கிளையில் அரசு தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அஜித்குமார் கொலை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு வழக்குகள், ஐகோர்ட் மதுரை கிளையில் தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



BSE 270.01 பாயிண்ட் 83,712.51

NSE 61.20 பாயிண்ட் 25,522.50




**தங்கம்** 1 சவரன் ₹72,480 | 1 கிராம் ₹9,060



**வெள்ளி** 1 கிலோ ₹120,000 | 1 கிராம் ₹120.00



**டாலர்** ₹85.79



**பெட்ரோல்** ₹100.75 **டீசல்** ₹92.34

# அமைதிக்கான நோபல் பரிசுக்கு அதிபர் ட்ரம்ப் தகுதியானவர்

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கருத்து

**வாஷிங்டன், ஜூலை 09-**

அமைதிக்கான நோபல் பரிசுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தகுதியானவர் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா சென்றுள்ள பெஞ்சமின் நெதன்யாகு, நேற்றிரவு டொனால்டு ட்ரம்ப்பின் இரவு விருந்தில் பங்கேற்றார். முன்னதாக, ட்ரம்பிடம் நெதன்யாகு ஒரு கடிதம் வழங்கினார். அப்போது பேசிய அவர், "அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஒன்றன் பின் ஒன்றாக நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் அமைதியை ஏற்படுத்துகிறார். எனவே, நோபல் பரிசு கமிட்டிக்கு அனுப்பிய பரிந்துரை கடிதத்தை நான் தற்போது தங்களுக்கு வழங்குகிறேன். அமைதிக்கான நோபல் பரிசு பெற நீங்கள் தகுதியானவர். நீங்கள் அதைப் பெற வேண்டும்" என கூறினார்.

நெதன்யாகுவின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய டொனால்டு ட்ரம்ப், "மிக்க நன்றி. நீங்கள் பரிந்துரை கடிதம் அனுப்பி இருப்பது எனக்கு தெரியாது. குறிப்பாக, நீங்கள் என்னை பரிந்துரைத்திருப்பது உண்மையில் அர்த்தம் நிறைந்தது. மிக்க நன்றி. நான் போர்களை நிறுத்துகிறேன். மக்கள் கொல்லப்படுவதை நான் வெறுக்கிறேன் என தெரிவித்தார்.

## வரும் ஆகஸ்ட் 1-ம் தேதி வரை

# இறக்குமதி வரிக்கான கால அவகாசத்தை நீட்டித்த அமெரிக்கா

**வாஷிங்டன், ஜூலை 09-**

இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீதான இறக்குமதி வரி விதிப்பு அமலாகும் கால அவகாசத்தை அமெரிக்க அரசு ஆகஸ்ட் 1ம் தேதி வரை நீட்டித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் ஜனவரி மாதம் பொறுப்பேற்றார். அதில் இருந்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை டிரம்ப் மேற்கொண்டு வருகிறார். அதன்படி, அமெரிக்க பொருட்கள் மீது அதிக வரி விதிக்கும் நாடுகள் மீது டிரம்ப் சரமாரியாக வரி விதித்தார்.

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் சீனா, இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் மீதான இறக்குமதி வரியை அதிகரித்தார். இந்திய பொருட்கள் மீது 27 சதவீத வரி விதிக்கப்பட்டது. ஆனால், இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீதான இறக்குமதி வரியை 90 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக டிரம்ப் அறிவித்தார். அந்த காலக்கெடு வரும் 9ம் தேதியுடன் நிறைவடைகிறது. 9ம் தேதிக்குப்பின் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இறக்குமதி வரி அமல்படுத்தப்படும் என தகவல் வெளியானது. இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீதான இறக்குமதி வரி விதிப்பு அமலாகும் கால அவகாசத்தை அமெரிக்க அரசு ஆகஸ்ட் 1ம் தேதி வரை நீட்டித்துள்ளது.

# ஹிமாச்சலில் நிலச்சரிவு; நாயால் 67 பேர் உயிர் பிழைத்த அதிசயம்

**சிம்லா, ஜூலை 09-**

ஹிமாச்சலில் நாயின் முன்னெச்சரிக்கையால் 67 பேர் காப்பாற்றப்பட்டுள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த 20ம் தேதி பருவமழை துவங்கியதில் இருந்து, ஹிமாச்சல பிரதேசத்தின் பல பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் மேக வெடிப்பு காரணமாக பெய்யும் மழையால் ஆங்காங்கே நிலச்சரிவும் ஏற்பட்டது. மண்டி, சிம்லா, சிர்மாவுர் உள்ளிட்ட மாவட்டங்களில் சாலைகள், குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக, இதுவரை 78 பேர் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக, மண்டி மாவட்டம் சில்பாதானி பகுதியில் பெய்த கனமழையால் சாலைகள் துண்டிக்கப்பட்டன; சிறிய பாலங்களும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. இந்த சூழ்நிலையில் மண்டியில் உள்ள, சியாத்தி கிராமத்தில், நள்ளிரவில் தூங்கிக் கொண்டிருந்த நாய் திடீரென குரைத்துள்ளது. எனவே உரிமையாளர் வந்து பார்க்க, சுவரில் விரிசல் விழுந்து தண்ணீர் உள்ளே வந்துள்ளது. பதறிய அவர், மொத்த கிராமத்தினரையும் அலர்ட் செய்ய, அவர்கள் அருகிலுள்ள கோவிலுக்குச் சென்றுள்ளனர்.

அடுத்த சில நிமிடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவால் வீடுகள் சேதமடைந்துள்ளன. நாயின் முன்னெச்சரிக்கையால் 67 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். நாய் சரியான நேரத்தில் குரைத்ததால், 67 பேர் உயிர் பிழைக்க முடிந்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# 'பிசி'யான விமான நிலையங்கள் பட்டியலில் டெல்லிக்கு 9-வது இடம்

**புதுடில்லி, ஜூலை 09-**

உலகின் 'பிசி'யான விமான நிலையங்கள்பட்டியலில் டில்லிக்கு 9வது இடம் கிடைத்துள்ளது.

சர்வதேச விமான கவுன்சில் அமைப்பு கடந்த 2024ம் ஆண்டில் உலகின் 20 'பிசி' யான விமான நிலையங்கள் பட்டியலை தயாரித்துள்ளது. இப்பட்டியலில் அமெரிக்காவின் அட்லாண்டா விமான நிலையம் முதலிடம் பிடித்துள்ளது. 10,80,67,776 பேரை கையாண்டுள்ளது. 2வது இடத்தில் துபாய் விமான நிலையமும் 3வது இடத்தில் அமெரிக்காவின் டல்லாஸ் விமான நிலையம் (8,78,17,864 பயணிகளை கையாண்டு) உள்ளது.

டில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் 7,78,20,834 பயணிகளை கையாண்டு 9 வது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு, 10 வது இடத்தில் இருந்த இந்த விமான நிலையம் தற்போது 8 வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஜப்பானின் ஹனிடா விமான நிலையம் 4வது இடத்திலும் பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள் ஹீத்ரோ விமான நிலையம் 5வது இடத்திலும் அமெரிக்காவின் டென்வர் விமான நிலையம் 6வது இடத்திலும், துருக்கியின் இஸ்தான்புல் விமான நிலையம் 7 வது இடத்திலும் அமெரிக்காவின் சிகாகோ விமான நிலையம் 8 வது இடத்திலும் , சீனாவின் ஷாங்காய் விமான நிலையம் 10வது இடத்திலும் உள்ளது. இந்த பட்டியலில் அமெரிக்காவின் 6 விமான நிலையங்கள் இடம்பிடித்துள்ளன.

இது தொடர்பாக சர்வதேச விமான நிலைய கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில், கடந்த 2024ம் ஆண்டு சர்வதேச அளவில், 940 கோடி பேர் விமானங்களில் பயணித்துள்ளனர். இதில், முதல் 20 இடங்களில் இருக்கும் விமானங்கள் மட்டும் 15.4 கோடி பயணிகளை கையாண்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

# உக்ரைனுக்கு கூடுதல் ஆயுதங்கள்: அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தகவல்

**வாஷிங்டன், ஜூலை 09-**

அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கி வரும் ராணுவ உதவிகள் நிறுத்தப்படும் என கடந்த வாரம் வெள்ளை மாளிகை அறிவித்திருந்த நிலையில் தற்போது கூடுதல் ஆயுதங்களை வழங்கவுள்ளோம் என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, உக்ரைனுக்கு கூடுதல் ஆயுதங்கள் வழங்கப்படுமா என்ற செய்தியாளரின் கேள்விக்குப் பதில் அளித்த ட்ரம்ப், நாங்கள் கூடுதல் ஆயுதங்களை அனுப்ப வேண்டி இருக்கும். குறிப்பாக தற்காப்பு ஆயுதங்கள். அவர்கள் (உக்ரைன்) மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். (ரஷ்ய அதிபர்) புதினின் செயல் மகிழ்ச்சி அளிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், உக்ரைனுக்கு 65 பில்லியன் டாலர் மதிப்புள்ள ராணுவ உதவிகளை வழங்க உறுதி அளித்திருந்தார். அதேநேரத்தில், டொனால்ட் ட்ரம்ப், கடந்த ஜனவரியில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதில் இருந்து உக்ரைனுக்கான ராணுவ உதவிகள் குறித்த அறிவிப்பை இதுவரை வெளியிடவில்லை. அதேநேரத்தில், அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கி வரும் ராணுவ உதவிகள் நிறுத்தப்படும். என கடந்த வாரம் மாளிகை அறிவித்தது. இந்நிலையில், உக்ரைனுக்கு ராணுவ உதவிகளை அளிக்க ட்ரம்ப் முன்வந்துள்ளார்.

# அன்புமணி தலைமையிலான கூட்டத்தில் கூட்டணி குறித்து முடிவெடுக்க வாய்ப்பு?

**சென்னை, ஜூலை 09-**

அன்புமணி நடத்தும் கூட்டத்தில், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ம.க. யாருடன் கூட்டணி அமைக்கவுள்ளது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஓமந்தூரில் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தலைமையில் நடைபெற்ற நிலையில், சென்னையில் பொறுப்பாளர்கள் கூட்டத்தை பா.ம.க. தலைவர் அன்புமணி நடத்துகிறார்.

அன்புமணி நடத்தும் கூட்டத்தில், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ம.க. யாருடன் கூட்டணி அமைக்கவுள்ளது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. அதேபோல், ஓமந்தூரில் பாட்டாளி மக்கள் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராமதாஸ் தலைமையிலான கூட்டத்தில் கௌரவத் தலைவர் ஜி.கே. மணி, பொதுச் செயலர் முரளிசங்கர், இணைப் பொதுச் செயலரும், எம்எல்ஏவுமான அருள், பொருளாளர் சையத் மன்சூர் உசேன், வன்னியர் சங்கத் தலைவர் பு.தா. அருள்மொழி, பா.ம.க. முன்னாள் மாநிலத் தலைவர் தீரன், முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே. மூர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்று உள்ளனர். பா.ம.க.வில் நடைபெறும் இந்த இரு கூட்டங்களிலும் வரும் பேரவைத் தேர்தல் தொடர்பாக முக்கிய முடிவு எடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

# பா.ம.க. செயற்குழு கூட்டத்தில் அன்புமணிக்கு எதிராக தீர்மானம்

**திண்டிவனம், ஜூலை 09-**

ராமதாஸ் தலைமையில் நடைபெற்ற பா.ம.க. செயற்குழு கூட்டத்தில் அன்புமணிக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ்க்கும் அவரது மகனும் பா.ம.க. தலைவருமான அன்புமணிக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இருவரும் மாறி மாறி கட்சி நிர்வாகிகளை நீக்கி வருகிறார்கள். இத்தகைய பரபரப்பான சூழலில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த ஓமந்தூரில் பா.ம.க. செயற்குழு நேற்று நடைபெற்றது. இந்தக்கூட்டத்தை அன்புமணி ராமதாஸ் புறக்கணித்தார்.

பா.ம.க. செயற்குழுவில் நேற்று 25 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அன்புமணி ராமதாஸ்க்கு எதிராகவும் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நேற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில வருமாறு:


*2026ல் ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெறக்கூடிய வகையில் கூட்டணி அமைக்க ராமதாஸ்க்கு அதிகாரம்'

*பா.ம.க. நிறுவனருக்கு களங்கத்தை உருவாக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ராமதாஸ்க்கு முழு அதிகாரம்'

*தலைமை உத்தரவுக்கு கட்டுப்படாமல் கட்சியை பலவீனப்படுத்துவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை'' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதேபோல, அன்புமணிக்கு கண்டனம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொதுவெளியில் ராமதாஸின் பேச்சுக்கு அன்புமணி கட்டுப்படாமல் இருப்பது கண்டித்தக்கது. நிறுவன தலைவருக்கு களங்கம் உருவாக்கும் வகையிலான செயல் கண்டித்தக்கது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**09-07-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எண்ணிய இலக்குகளை எண்ணியபடி அடைந்து மகிழ்வீர்கள். வேண்டுதல்கள் நிறைவேற புனித பயணங்கள் மேற்கொள்ள நேரும். புதிய திட்டங்களை நிறைவேற்ற சரியான நேரம். செல்வம் சேரும்.

**ரிஷபம்:-** அதிர்ஷ்டம் நம்பாமல் உழைப்பை நம்பினால் வாழ்க்கையில் முன்னேறலாம். அதிகாரிகளிடம் உணர்ச்சிபூர்வமாக பேசாமல் பணிவுடன் பேசப் பயன் பெறலாம்.

**மிதுனம்:-** பலவகைகளிலும் பண வருமானம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர்.

**கடகம்:-** எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி மேல் வெற்றி கிட்டும். பல வழிகளிலும் அதிக தனலாபம் கிடைக்கும். எதிர்பாலர் பால் ஈர்ப்பு, இன்பம் மற்றும் ஏற்றங்கள் ஏற்படும்.

**சிம்மம்:-** உங்கள் திட்டங்களை செயல்படுத்தும் முன் மற்றவர்கள் ஆலோசனைகளுக்கும் மதிப்பு அளியுங்கள். வாங்கி, விற்பதில் சுறுசுறுப்பாக செயல்பட்டால் பங்குகள் இலாபம் தரும்.

**கன்னி:-** பண இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்கவும். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். தேவையற்ற அவமானங்கள் ஏற்படும். கோபத்தை தவிர்க்கவும்.

**துலாம்:-** மனைவியின் ஒத்துழைப்பு மன மகிழ்ச்சி அளிக்கும். சகோதரர்களுக்கு நன்மை உண்டாகும். முக்கிய நபர்களின் சந்திப்பால் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும் .

**விருச்சிகம்:-** முக்கிய செயல்பாடுகளில் தடைகள் ஏற்படலாம். கட்டுக்கு அடங்காத செலவுகள் ஏற்பட்டுக் கடன் பெற நேரும். கடின உழைப்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் காணலாம்.

**தனுசு:-** இன்பச் சுற்றுலா, நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் மற்றும் உறவுகளை சந்திப்பதால் ஏற்படும் மன மகிழ்ச்சி ஆகியவை ஏற்படும். தனவரவு உண்டு.

**மகரம்:-** குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படலாம். பெண்களின் தேவையற்ற ஆசைகளால் வீண் செலவுகள் ஏற்படும். விளம்பர யுக்திகள் வியாபாரத்தைப் பெருக்க முயன்றாலும், ஏமாற்றமே மிஞ்சும்.

**கும்பம்:-** மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும்.ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும். தொழிலில் புதிய மாற்றங்களால் இலாபங்கள் அதிகரிக்கும்.

**மீனம்:-** எதிர்காலத் திட்டங்கள் எதிர்பார்த்தபடி வெற்றி பெறும். பொருளாதாரச் சிறப்பு எனும் நட்சத்திரம் உங்கள் வானில் பிரகாசிக்கும். பணவரவு உள்ள நாள். இந்திர போகம் உண்டாகும்.

# கடலூர் ரயில் விபத்து: மத்திய அரசு மீது கனிமொழி எம்.பி. குற்றச்சாட்டு

**சென்னை, ஜூலை 09-**

ரயில் விபத்துகள் குறித்து மத்திய அரசுக்கு துளியளவும் கவலையில்லை என தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி குற்றம்சாட்டியுள்ளார்.



கடலூர் அருகே ரயில்வே கேட்டை கடக்க முயன்ற பள்ளி வேன் மீது ரயில் மோதியதில் 3 மாணவர்கள் பலியாகியுள்ளனர். மேலும், ஓட்டுநர் மற்றும் 2 மாணவர்கள் படுகாயங்களுடன் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து குறித்து கனிமொழி தெரிவித்ததாவது: கடலூரில் பள்ளி வாகனம் மீது ரயில் மோதிய விபத்தில் இரு குழந்தைகள் உயிரிழந்த செய்தியறிந்து அதிர்ச்சியடைந்தேன். இத்துயர்மிகு வேளையில், அக்குடும்பங்களின் கரம்பற்றி எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிகிச்சை பெற்றுவரும் குழந்தைகளும் விரைந்து நலம்பெற விழைகிறேன்.

இந்த நாட்டில் மொத்தமுள்ள 68,584 கி.மீ தூரம் ரயில்வே வழித்தடத்தில் வெறும் 1,548 கி.மீ மட்டுமே 'கவாச்' பாதுகாப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது என்பதைப் பலமுறை சுட்டிக்காட்டிவிட்டோம். இத்தனை விபத்துகள் நேர்ந்த பின்னும், மத்திய அரசுக்கு இதில் துளியளவும் கவலை இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கும்பகோணம்-தஞ்சை சாலையில் விபத்து: 4 பேர் பலி

**தஞ்சை, ஜூலை 09-**

சரக்கு வாகனம் மீது கார் மோதிய விபத்தில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

சென்னை பெருங்களத்தூரை சேர்ந்தவர் குமார் (57). இவர் தனது மனைவி ஜெயா (55), மகள் மோனிஷா (30) மற்றும் ஸ்டாலின் (36), அவரது மனைவி துர்கா (32), சிறுமி நிவேனி சூரியா (3) ஆகியோருடன் ஆன்மிக சுற்றுலாவாக காரில் புறப்பட்டார். நேற்று காலை கும்பகோணம் கோவில்களில் சுவாமி தரிசனம் செய்துவிட்டு தஞ்சாவூர் பெரிய கோவிலுக்கு புறப்பட்டனர். கும்பகோணம் - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் கார் வந்து கொண்டு இருந்தது. காரை ஸ்டாலின் ஓட்டி வந்தார்.

இந்நிலையில் தஞ்சாவூர் அருகே உதாரமங்கலம் பகுதியில் நாற்றுக்களை ஏற்றிக் கொண்டு வயலில் இருந்து சரக்கு வேனை விக்னேஷ் என்பவர் ஓட்டி வந்துள்ளார். அப்போது ஸ்டாலின் ஓட்டி வந்த காரும் நாற்று ஏற்றி வந்த சரக்கு வேனும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. விபத்து நடந்ததைக் கண்டு அருகில் இருந்தவர்கள் ஓடிவந்தனர். தொடர்ந்து காரில் இருந்தவர்களை மீட்டனர். தகவலறிந்த தாலுகா போலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். இந்த விபத்தில் ஜெயா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் .

காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் சிறுமி நிவேனி சூர்யா, துர்கா, குமார் ஆகியோர் பரிதாபமாக உயிரிழந்தனர். மோனிஷா, ஸ்டாலின் மற்றும் சரக்கு வேன் டிரைவர் உதாரமங்கலத்தை சேர்ந்த விக்னேஷ் ஆகியோர் படுகாயத்துடன் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டனர். விபத்து குறித்து தஞ்சாவூர் தாலுகா போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். இந்த சம்பவம் தஞ்சாவூர் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## திருப்புவனம் காவலாளி வழக்கில் தொடர்பு:

# பேராசிரியை நிகிதா மீண்டும் கல்லூரி பணிக்கு திரும்பினார்

**திண்டுக்கல், ஜூலை 09-**

மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் தொடர்புடைய நிகிதா மீண்டும் பணிகது திரும்பினார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவிலில் காவலாளியாக வேலை பார்த்தவர் அஜித்குமார் (வயது 27). இவர் மீது மதுரை ஆலம்பட்டியை சேர்ந்த பேராசிரியை நிகிதா, நகை திருட்டு புகார் அளித்து இருந்தார். அதன்பேரில் அஜித்குமாரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது போலீசார் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

நிகிதா, திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரியில் தாவரவியல் பேராசிரியையாக பணியாற்றுகிறார். மேலும் காவலாளி அஜித்குமார் மரணத்துக்கு பின்னர் அவர் கல்லூரிக்கு வரவில்லை. விடுமுறையில் இருந்ததாக கூறப்பட்டது. இதற்கிடையே பேராசிரியை தொடர்பாக புதுப்புது தகவல்கள் வெளியாகின. குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியை நிகிதா மீது கல்லூரி மாணவிகள் திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் ஒரு புகார் மனு கொடுத்தனர். அதில் பேராசிரியை மன ரீதியாக துன்புறுத்துவதாகவும், அவரை பணியிட மாற்றம் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்து இருந்தனர். ஆனால் அந்த புகார் தொடர்பாக பேராசிரியை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காவலாளி அஜித்குமார் உயிரிழப்புக்கு காரணமான போலீசார் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மருத்துவ விடுமுறை எடுத்துச் சென்று இருந்த பேராசிரியை நிகிதா, சர்ச்சை மற்றும் பரபரப்புக்கு மத்தியில் நேற்று திண்டுக்கல் அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு வந்தார். பின்னர் வழக்கம்போல் வகுப்பறைக்கு சென்று மாணவிகளுக்கு பாடம் கற்பிப்பது, அலுவலக பணிகளை மேற்கொள்வது என தனது அன்றாட பணிகளை தொடங்கிவிட்டதாக கல்லூரி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# பலியான மாணவர்களின் உடலுக்கு அமைச்சர் சி.வி. கணேசன் அஞ்சலி

**கடலூர், ஜூலை 09-**

கடலூர் ரயில் விபத்தில் பலியான மாணவர்களின் உடலுக்கு அமைச்சர் சி.வி. கணேசன் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.



கடலூர் மாவட்டம், செம்மங்குப்பத்தில் நேற்று (ஜூலை 8) காலை குழந்தைகளுடன் சென்ற பள்ளி வேன், ரயில்வே கேட்டை கடக்க முயன்றபோது, சிதம்பரம் நோக்கிச் சென்ற ரயில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் திராவிடமணி என்பவரின் மகள் சாருமதி (16), மகன் செழியன்(15), விஜயசந்திரகுமார் என்பவரின் மகன் விமலேஷ் (10) ஆகியோர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் விபத்தில் படுகாயமடைந்த வாகன ஓட்டுநர், 3 பள்ளி மாணவர்கள் கடலூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் பலியான மாணவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் ஸ்டாலின் உள்பட பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். தொடர்ந்து விபத்தில் பலியான மாணவர்களின் உடல் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மாணவர்களின் உறவினர்கள், நண்பர்கள் பலரும் அஞ்சலி செலுத்தி வரும் நிலையில் தமிழக அரசு சார்பில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் நேரில் சென்று, மாணவர்களின் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். தமிழக அரசு சார்பிலும் ரயில்வே சார்பிலும் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருப்பரங்குன்றம் கோவிலில் அமைச்சர்கள் ஆய்வு!

**மதுரை,ஜூலை 09-**

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணி மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் ஆய்வு மேற்கொண்டார்.

உடன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியஸ்வாமி திருக்கோவில் அறங்கவலர் சண்முகசுந்தரம் ஆகியோர் உள்ளனர்

# முன்னாள் எம்.எல்.ஏ. கோவிந்தசாமி மறைவு: முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, ஜூலை 09-**

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.கோவிந்தசாமி மறைவுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர். மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் .வி.சி.கோவிந்தசாமி உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தின் மூத்த அரசியல்வாதி,1964-1965 காலகட்டத்தில் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில்கலந்து கொண்டு சிறை சென்ற மொழிப்போர் வீரர் என அரைநூற்றாண்டுக்கும்மேல் அரசியல் களத்தில் பல்வேறு பொறுப்புகளை ஏற்று அதில் தனது முழுஆற்றலை வெளிப்படுத்தியவர்.

கோவிந்தசாமி தி.மு.க. வேட்பாளராக 1971, 1989 சட்டமன்றத்தேர்தல்களில் காவேரிப்பட்டினம் தொகுதியில் இருந்து வெற்றி பெற்றுத்தமிழ்நாடு சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பெரியார்,அண்ணா, கலைஞர், அன்பழகன் ஆகியோருடன் இணைந்து இயக்கத்தில் பணியாற்றியவர்..கோவிந்தசாமியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தி. கழகத்தினருக்கும் பொதுமக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஏர் இந்தியா விமான விபத்து: விசாரணை அறிக்கை தாக்கல்

**புதுடெல்லி, ஜூலை 09-**

ஏர் இந்தியா விமான விபத்து தொடர்பான தனது முதல்கட்ட அறிக்கையை விமான விபத்து புலனாய்வுப் பணியகம், மத்திய அரசிடம் சமர்பித்துள்ளது.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் கடந்த மாதம் 12 ஆம் தேதி விபத்தில் சிக்கியது. இந்த விமான விபத்தில், விமானத்தில் பயணித்த ஒருவர் மட்டுமே உயிர் பிழைத்த நிலையில், விமானப் பணியாளர்கள் உள்பட 241 பேர் பலியாகினர். மேலும், விமானம் மோதிய மருத்துவக் கல்லூரிக் கட்டடம் மற்றும் குடிருப்புப் பகுதிகளில் இருந்த 19 பேர் பலியாகினர் இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்த விமான விபத்து புலனாய்வுப் பணியகத்துக்கு மத்திய சிவில் போக்குவரத்து அமைச்சகம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், விமான விபத்து நடைபெற்று கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆக உள்ள நிலையில், தனது முதல்கட்ட அறிக்கையை விமான விபத்து புலனாய்வுப் பணியகம், மத்திய அரசிடம் தனது அறிக்கையை நேற்று சமர்பித்துள்ளது. இந்த அறிக்கை விவரங்கள் விரைவில் பொது வெளியில் மத்திய அரசு வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பகுதி நேர ஆசிரியர்கள் கைது: எடப்பாடி பழனிசாமி கண்டனம்



**சென்னை, ஜூலை 09-**

பகுதி நேர ஆசிரியர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தனது எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது: பணி நிரந்தரம் கோரி போராட்டத்திற்கு புறப்பட்ட பகுதி நேர ஆசிரியர்கள், தி.மு.க. அரசால் அரஜாகப் போக்குடன் கைது செய்யப்பட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. சிறை நிரப்பும் போராட்டம் செய்யும் அளவிற்கு பகுதி நேர ஆசிரியர்களை இந்த தி.மு.க. அரசு தள்ளியிருப்பது வெட்கக்கேடானது. அதே போல, ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் ரமேஷ் பாபு கத்தியால் குத்தப்பட்டதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

அரசு மருத்துவமனையில், அதுவும் மருத்துவருக்கே பாதுகாப்பு இல்லை என்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலை. கைது செய்யப்பட்ட பகுதி நேர ஆசிரியர்கள், எந்தவித சட்ட நடவடிக்கையும் இன்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்; ஆசிரியர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் எனவும், ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவரை தாக்கிய நபர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக

# புதிய இணையதளம்: மத்திய அரசு அறிவிப்பு

**புதுடெல்லி, ஜூலை 09-**

மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது பொதுமக்கள் சுயவிவரம் தெரிவிக்க புதிய இணையதளம் தொடங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

2027-ம் ஆண்டில் இந்தியாவின் 16-வது மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கான அறிவிப்பை மத்திய அரசு கடந்த மாதம் 16-ம் தேதி வெளியிட்டது.

அந்த அறிவிப்பில், லடாக் போன்ற பனிப்பொழிவு நிறைந்த பகுதிகளில் அக். 1, 2026 என்ற தேதியை அடிப்படையாகக் கொண்டும், நாட்டின் பிற பகுதிகளில் மார்ச் 1, 2027 என்ற தேதியை அடிப்படையாகக் கொண்டும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள்தொகை கணக்கெடுப்பில், பொதுமக்கள் சுயமாக பங்கேற்கலாம் என்றும் அதற்காக விரைவில் இணையதளம் தொடங்கப்படும் என்றும் மத்திய அரசு நேற்று அறிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய அரசின் மூத்த அதிகாரிகள் கூறியதாவது: முதலாவது டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பாகும் இது.

இதில் பங்கேற்கவுள்ள கணக்கெடுப்பாளர்கள் ஆன்டிராய்ட், ஆப்பிள் போன்கள் வழியாக தகவலைத் திரட்டுவர். மேலும், இதில் சுயமாக மக்கள் பங்கேற்று தங்களது விவரங்களை தெரிவிக்க இந்த புதிய இணையதளம் உதவும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பை நவீனப்படுத்துவதற்காகவே டிஜிட்டல் கணக்கெடுப்பு திட்டத்தைத் தொடங்கவுள்ளோம்.

முதல்முறையாக டிஜிட்டல் முறையில் தகவல்களைத் திரட்டி, அதை மத்திய சர்வருக்கு எடுத்துச் செல்லவுள்ளோம். மக்கள் சுயமாக கணக்கெடுப்பில் பங்கேற்பதற்காக விரைவில் தனி இணையதளத்தை மத்திய அரசு தொடங்கவுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஸ்ரீகாந்த், கிருஷ்ணாவுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கியது சென்னை ஐகோர்ட்





**சென்னை, ஜூலை 09-**

போதைப்பொருள் பயன்படுத்திய வழக்கில் நடிகர்கள் ஸ்ரீகாந்த் மற்றும் கிருஷ்ணாவுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பயன்படுத்திய விவகாரத்தில் நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுவை சென்னை போதைப்பொருள் கடத்தல் தடுப்புப்பிரிவு சிறப்பு கோர்ட்டு தள்ளுபடி செய்தது.இதைத்தொடர்ந்து அவர்கள் இருவரும் ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் நீதிபதி நிர்மல்குமார் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது ஸ்ரீகாந்த் தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல், 'இந்த வழக்கில் முதல் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நடிகர் ஸ்ரீகாந்த் கைது செய்யப்பட்டு உள்ளார். அவரிடம் இருந்து போதைப்பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை' என வாதாடினார். நடிகர் கிருஷ்ணா தரப்பில் ஆஜரான வக்கீல், 'நடிகர் கிருஷ்ணாவிடம் நடத்திய மருத்துவ பரிசோதனையில், போதைப்பொருள் பயன்படுத்தியது நிரூபிக்கப்படவில்லை' என தெரிவித்தார்.

போலீசார் தரப்பில், 'இந்த வழக்கில் ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு ஜாமீன் வழங்கக்கூடாது' என்றார். அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஆகியோரின் ஜாமீன் மனுக்கள் மீது நேற்று தீர்ப்பு கூறப்படும் என அறிவித்தார்.

இதன்படி, இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த சென்னை ஐகோர்ட்டு இருவருக்கும் நிபந்தனை ஜாமீன் அளித்து உத்தரவிட்டது. ரூ.10 ஆயிரம் சொந்த ஜாமீன் மற்றும் அதே தொகைக்கு இருநபர்கள் ஜாமீன் அளிக்க வேண்டும் எனவும், மறு உத்தரவு வரும் வரை விசாரணை அதிகாரி முன்பாக இருவரும் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிபதி நிபந்தனை விதித்துள்ளார்.

# கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவில் தேரோட்டம் கோலாகலம்



**தேவகோட்டை, ஜூலை 09-**

கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவில் தேரோட்டம் நேற்று கோலாகலமாக நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே ராமாயண வரலாற்று சிறப்பும் இலக்கிய சான்றும் பெற்ற கண்டதேவி கிராமத்தில் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட சொர்ணமூர்த்தீஸ்வரர் பெரிய நாயகி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் ஆனி மாதம் தேரோட்டம் மிகச் சிறப்பாக நடைபெறும். உஞ்சனை, தென்னிலை, செம்பொன்மாரி, இரவுசேரி நான்கு நாட்டார்கள் மற்றும் கிராம பொதுமக்கள் இத்தேரோட்டத் திருவிழாவை விமரிசையாக கொண்டாடுவார்கள். கடந்த ஆண்டு தேர் புதுப்பிக்கப்பட்டு வெள்ளோட்டமும் தேரோட்டமும் நடைபெற்றது.

இந்த ஆண்டுக்கான தேரோட்டத் திருவிழாவிற்கு கடந்த மாதம் 30ம் தேதி கொடியேற்றம், காப்பு கட்டுதல் நடைபெற்று, ஒவ்வொரு நாளும் சுவாமி நான்கு ரத வீதிகளில் வலம் வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. தேர்கள் அலங்கரிக்கும் பணி மற்றும் ஹைட்ராலிக் பிரேக் அமைத்து பரிசோதனை செய்யும் பணியும் நடைபெற்றது.

இந்நிலையில் விழாவின் சிகர நிகழ்வான தேரோட்டம் நேற்று நடைபெற்றது. இதையொட்டி அதிகாலை 5 மணி அளவில் சுவாமிக்கு சிறப்பு தீபாராதனை காண்பிக்கப்பட்டு சுவாமி மற்றும் அம்பாள் அலங்கரிக்கப்பட்ட தேரில் எழுந்தருளினர். காலை 6.00 மணியளவில் உஞ்சனை, தென்னிலை, இரவு சேரி, செம்பொன்மாரி நான்கு நாட்டார்களும், அனைத்து சமுதாய கிராம பொதுமக்களும் தேர்வலத்தில் நின்றனர்.

அதனைத் தொடர்ந்து தேரில் எழுந்தருளிய சுவாமி மற்றும் அம்பாளுக்கு சிறப்பு தீபாராதனை காண்பிக்கப்பட்டு, 6.10 மணியளவில் தேர் புறப்பட்டது. 'ஓம் நமசிவாய' என விண்ணை தொடும் அளவிற்கு பக்தர்கள் முழக்கமிட்டபடி தேர் இழுத்தனர். தேர் நான்கு ரத வீதிகளில் வலம் வந்து நிலை அடைந்தது. இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். தேரோட்டத்தை யொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 2000-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# பிரேசிலில் 114 குதிரைகளுடன் பிரதமர் மோடிக்கு வரவேற்பு



**பிரேசிலியா, ஜூலை 09-**

பிரேசில் அதிபர் லூலா டி சில்வா அரண்மனை வாசலில் வந்து நின்று பிரதமர் மோடியை வரவேற்றார்.இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

பிரதமர் மோடி கடந்த 2-ம் தேதி முதல் 5 நாடுகள் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டு உள்ளார். இதில் கானா மற்றும் டிரினிடாட் டொபாகா நாடுகளில் பயணத்தை முடித்துக்கொண்ட அவர், பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு சென்றார். இதற்கு முன் 3 முறை பிரேசில் சென்றுள்ளார். முதலாவதாக ஜூலை 201

இந்நிலையில் தற்போது ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக மீண்டும் பிரேசில் சென்றார். மாநாட்டுக்கு பிறகு, பிரதமர் மோடி, பிரேசிலியா நகரில் உள்ள அல்வோராடா மாளிகைக்கு சென்றார். அப்போது பிரதமர் மோடிக்கு 114 குதிரைகளுடன் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரேசில் அதிபர் லூலா டி சில்வா அரண்மனை வாசலில் வந்து நின்று பிரதமர் மோடிக்கு வரவேற்பு அளித்தார். இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. முன்னதாக, ரியோ பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் போது சிலி அதிபர் கேப்ரியல் போரிக் போண்டை சந்தித்ததில் மகிழ்ச்சி. இந்தியா-சிலி நட்புறவு மேலும் மேலும் வலுவடைந்து வருகிறது என்று பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# ரயில்வே கேட் திறந்து தான் இருந்தது: படுகாயமடைந்த மாணவர் அதிர்ச்சி தகவல்



**கடலூர், ஜூலை 09-**

ரயில்வே கேட் திறந்து தான் இருந்தது என படுகாயமடைந்த மாணவர் தெரிவித்துள்ளார்.

கடலூரில் செம்மங்குப்பம் அருகே பள்ளி வேன் ஒன்று குழந்தைகளை ஏற்றி கொண்டு நேற்று காலை சென்று கொண்டிருந்தது. அப்போது, வழியில் ரயில்வே கேட் ஒன்று இருந்தது. அதன் வழியே அந்த பள்ளி வேன் கடந்து செல்ல முயன்றது. இந்நிலையில், பள்ளி வேன் சென்றபோது, அந்த பகுதியின் வழியே சிதம்பரம் நோக்கி ரயில் ஒன்று சென்றது. அது பள்ளி வேன் மீது மோதி கோர விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில், வேன் பல மீட்டர் தூரத்திற்கு தூக்கி வீசப்பட்டது. இதில் வேனில் இருந்த குழந்தைகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகினர். இந்த சம்பவத்தில், ஒரு மாணவர், ஒரு மாணவி என 2 பேர் பலியாகினர். வேன் ஓட்டுநர் மற்றும் பள்ளி குழந்தைகள் பலர் காயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அலட்சியமாக செயல்பட்டதாக கேட் கீப்பர் பங்கஜ் சர்மா சஸ்பெண்ட் செய்யப்பட்டார். தற்போது இந்த சம்பவம் தொடர்பாக கேட் கீப்பர் பங்கஜ் சர்மாவை போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவத்தில் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வரும் மாணவர் விஸ்வேஷ் கூறுகையில், "வழக்கமாக செல்லும் பாதையில் சென்றபோது கேட் திறந்துதான் இருந்தது. சிக்னல் எதுவும் போடப்படவில்லை.. ரயில் வரும் சத்தம் கூட கேட்கவில்லை. பள்ளி வேன் கடந்து சென்றபோது ரயில் மோதியது. நான் விழுந்து எழுந்திருச்ச போது கூட அந்த கேட் கீப்பர் வர வில்லை. ரயில்வே கேட்டை வேன் டிரைவர் திறக்க சொல்லவில்லை, கேட் கீப்பர் சொல்வது முற்றிலும் பொய்.." என்று கூறினார்.

வேன் விபத்து சம்பவத்தில் காயங்களுடன் சிகிச்சை பெற்று வரும் பள்ளி வேன் ஓட்டுநர் கூறுகையில், "நான் செல்லும்போது கேட் திறந்து தான் இருந்தது.. வாகனத்தில் 4 மாணவர்கள் இருந்தனர்.. நான் கேட் கீப்பரிடம் பேசவே இல்லை.. ரயில் சென்று விட்டது என நினைத்து கேட்டை கடந்தோம். கேட் கீப்பர் அந்த இடத்தில் இல்லை.. அதனால் தான் வாகனத்தை இயக்கினேன்" என்று கூறினார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

### கடலூர் ரயில் விபத்தில் மாணவர்கள் பலி:

# அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல்

**சென்னை, ஜூலை 09-**

கடலூர் பள்ளி வேன் விபத்தில் இறந்த மாணவர்களின் குடும்பத்திற்கு அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கடலூரில் மாணவர்களை ஏற்றிக்கொண்டு சென்ற தனியார் பள்ளி வேன் மீது ரயில் மோதியதில், 2 மாணவர்களும், 1 மாணவியும் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன் என தெரிவித்துள்ளார்.

த.வெ.க. தலைவர் விஜய் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், விபத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்து நடைபெற்ற இடத்தில் பொதுமக்கள் பாதுகாப்பாக பயணிக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்திற்கு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை இரங்கல் தெரிவித்து அறிக்கை வெளியிட்டு உள்ளார். அதில், மக்கள் எங்கு அதிகம் செல்கிறார்களோ அந்த இடங்களில் பாதுகாப்பும், எச்சரிக்கையும் கட்டாயம் இருக்க வேண்டும். இத்தகைய துயரங்களுக்கு ரயில்வே துறை முழு பொறுப்பு ஏற்க வேண்டும். மத்திய ரயில்வே மந்திரி நேரடியாக இதனை கவனித்து, பாதுகாப்பு குறைபாடுகளை உடனடியாக சரி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்து உள்ளார். பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட ஆளில்லா கடவுப்பாதைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைப் போல, கடவுப் பாதைகள் இருக்கும் இடங்கள் அனைத்திலும் மேம்பாலங்களை அமைக்க மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்; இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடலூர் ரயில் விபத்து; நடந்தது என்ன? ரயில்வே விளக்கம்

**கடலூர், ஜூலை 09-**

ரயில்வே கேட்டை திறக்கும்படி கேட் கீப்பரிடம் வேன் ஓட்டுநர் வலியுறுத்தியுள்ளார் என ரயில்வே தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கடலூரில் செம்மங்குப்பம் அருகே கடலூர்-ஆலப்பாக்கம் இடையே பள்ளி வேன் ஒன்று குழந்தைகளை ஏற்றி கொண்டு நேற்று காலை சென்று கொண்டிருந்தது. அப்போது, வழியில் ரயில்வே கேட் ஒன்று இருந்தது. அதன் வழியே அந்த பள்ளி வேன் கடந்து செல்ல முயன்றது.

இந்நிலையில், பள்ளி வேன் சென்றபோது, அந்த பகுதியின் வழியே விழுப்புரத்தில் இருந்து மயிலாடுதுறை நோக்கி ரயில் சென்றது. அது பள்ளி வேன் மீது மோதி கோர விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில், வேன் பல மீட்டர் தூரத்திற்கு இழுத்து செல்லப்பட்டது. இதில் வேனில் இருந்த குழந்தைகள் தூக்கி வீசப்பட்டனர். இந்த சம்பவத்தில், ஒரு மாணவர், ஒரு மாணவி என 2 பேர் பலியாகி உள்ளனர். வேன் ஓட்டுநர் மற்றும் பள்ளி குழந்தைகள் பலர் காயம் அடைந்து உள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். பலருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்தின்போது, ரயில்வே கேட் மூடப்படாமல் இருந்துள்ளது. இது விபத்திற்கான முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. இதனை தொடர்ந்து, ரயில்வே கேட் கீப்பர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தினர்.

இந்நிலையில், இந்த சம்பவம் பற்றி ரயில்வே தரப்பில் இருந்து விளக்கம் அளிக்கப்பட்டது. அதில், ரயில்வே கேட்டை திறக்கும்படி கேட் கீப்பரிடம் வேன் ஓட்டுநர் வலியுறுத்தியுள்ளார். வேன் போகும் வரை கேட்டை மூட வேண்டாம் என அவர் கூறினார் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதே போன்று கேட்டை பாதி மூடி கொண்டிருக்கும்போது, வேன் ஓட்டுநர் உள்ளே சென்றார் என மற்றொரு தகவலும் கூறப்படுகிறது. கேட் கீப்பர் பணியின்போது தூங்கியதே விபத்துக்கான காரணம் என பொதுமக்கள் கூறி வரும் நிலையில், ரயில்வே மாறுபட்ட விளக்கம் அளித்துள்ளது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



**ஜே.**டி.யு.-பா.ஜ.க. கூட்டணி பீகாரை நாட்டின் குற்றத் தலைநகராக மாற்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. பீகாரில் வறுமை உச்சத்தில் உள்ளது. சமூக மற்றும் பொருளாதார நீதியில் நிலைமை மோசமாகி விட்டது. பீகாரில் மாற்றம் நிச்சயம். இன்டியா கூட்டணி இந்த மாற்றத்தைக் கொண்டுவரும்.

**- மல்லிகார்ஜூன் கார்கே**



**ஆ**ட்சியில் தவறு எதுவும் நடக்கக் கூடாது என, முதல்வர் எச்சரிக்கையாக இருக்கிறார். அந்த நல்ல எண்ணத்தில் தான் மதுரை மாநகராட்சி விவகாரத்தில் அவர் நடவடிக்கை எடுத்திருப்பதாக பார்க்கிறேன். 2026 தேர்தலில் 8 தொகுதிகளில் போட்டியிட்டால்தான் கட்சிக்கு அங்கீகாரம் கிடைக்கும் என்பதால் 11 சீட் வரை கேட்க வேண்டி வரலாம்.

**- வைகோ**



**தே**ர்தல் ஆணையம் அரசியலமைப்பிற்கு எதிரான ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இது அரசியலமைப்புக்கு எதிரானது. இந்த சூழ்ச்சிகளை இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், மக்கள் விழித்தெழ வேண்டிய நேரம் வந்துவிட்டது. தொடர்ந்து சூழ்ச்சிகளில் ஈடுபட்டால் அரசியலமைப்பைக் காப்பற்ற போராட்டம் நடைபெறும்.

**- பரூக் அப்துல்லா**



**போ**ரை நிறுத்தியதற்கு ட்ரம்ப் மீண்டும் உரிமை கோருகிறார்; இந்தியா, பாகிஸ்தான் உடனான வர்த்தக ஒப்பந்தம் மிக விரைவில் அறிவிக்கப்பட உள்ளது என்று முன்பு அறிவித்ததைப் போலவே தற்போதும் ட்ரம்ப் கூறுகிறார். ஆனால், இந்த விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி எப்போது தனது மவுனத்தை கலைப்பார்?

**- ஜெயராம் ரமேஷ்**



திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் திருக்கோயில் ஆனிப்பெரும் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டத்தில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர். பி.கே.சேகர்பாபு ஆகியோர் கலந்து கொண்டு வடம் பிடித்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தனர். உடன் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், கலெக்டர் சுகுமார் உள்ளனர்.



கோவில்பட்டி வேலாயுதபுரம் பகுதியில் ஆதார் சிறப்பு முகாம் நடந்தது. நிகழ்ச்சிக்கு நகர்மன்ற உறுப்பினர் லவ ராஜா தலைமை தாங்கினார். புதிய கார்டு பதிவு செய்தல், முதியோர்களுக்கு ரேகை பதிவு செய்தல் போன் நம்பர் மாற்றம் முகவரி மாற்றம் போன்ற பணிகள் நடந்தது நூறுக்கும் மேற்பட்டோர் பலன் அடைந்தனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் மத்திய ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பேற்ற வீராணம் சேக் முகமது தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலனை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



தென்காசி வடக்கு ஒன்றியத்தை சேர்ந்த ஜெய்கணேஷ் சமீபத்தில் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டு மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரை பாஜக தென்காசி மாவட்டத் தலைவர் ஆனந்தன்அய்யாசாமி ஆறுதல் கூறி நலம் விசாரித்தார். உடன் மாவட்ட நிர்வாகிகள் தர்மர் சண்முகராஜ், ராம்குமார், ஒன்றிய தலைவர் அன்பு, முன்னாள் ஒன்றிய தலைவர் ஐயப்பன் உள்ளனர்.

# கோவில்பட்டி எஸ்.எஸ்.டி.எம். கல்லூரியில் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு கருத்தரங்கம்



**கோவில்பட்டி ஜூலை 09**

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி எஸ்.எஸ் துரைச்சாமி நாடார் மாரியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கோவில்பட்டி ரோட்டரி சங்கம் சார்பில் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது.

இந்நிகழ்ச்சிக்கு ரோட்டரி மாவட்ட ஆளுநர் தினேஷ் பாபு தலைமை வகித்தார். கல்லூரி செயலாளர் கண்ணன், ரோட்டரி மாவட்ட உதவி ஆளுநர் பரமேஸ்வரன், தலைவர் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் செல்வராஜ் அனைவரையும் வரவேற்றார்.

விருதுநகர் சுற்றுச்சூழல் ஆர்வலர் ராஜவல்லி ராஜூ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வீடுகளிலிருந்து பெறப்படும் குப்பைகளை மக்கும் குப்பை மக்காத குப்பை என தனித்தனியாக தரம் பிரித்து வழங்கிடவும், குப்பைகளை மறுசுழற்சி செய்து பயன்படுத்திடவும், குப்பைகளை 50 வகையாக தரம் பிரித்து அதிக லாபம் ஈட்டுவது குறித்தும் சிறப்புரையாற்றினார்.

இதில் ரோட்டரி சங்க நிர்வாகிகள் விநாயகா ரமேஷ், அருண், முத்துச்செல்வம், சீனிவாசன், ரவி மாணிக்கம், பழனி குமார், நாராயணசாமி, இளங்கோ, உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கல்லூரி பேராசிரியர் ஸ்ருதி நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி பேராசிரியர் விஜய கோபாலன் சிறப்பாக செய்திருந்தார்.

# திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் திருத்தேரோட்டம்: சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் பி. கே.சேகர்பாபு வடம் பிடித்து தொடங்கி வைத்தனர்



**நெல்லை,ஜூலை.09**

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோயில் ஆனிப்பெரும் திருவிழா கடந்த ஜூன் 30 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தினந்தோறும் காலை மற்றும் மாலையில் சுவாமி மற்றும் அம்பாள் வீதியுலா, சிறப்பு பூஜைகள் மற்றும் ஆன்மிக இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டத்தில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர். பி. கே.சேகர்பாபு ஆகியோர் கலந்து கொண்டு வடம் பிடித்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தனர். பின்னர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திருநெல்வேலி, அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மாள் திருக்கோயில் ஆனிப்பெரும் திருவிழாவை முன்னிட்டு இன்றைக்கு ஆசியாவிலேயே மூன்றாவது பெரிய தேரான இந்தத் திருத்தேரின் 519-வது தேரோட்டம் இன்றைக்கு வெகு விமரிசையாக சிவ, சிவ என்ற கோஷத்தோடு திருத்தேரை வடம் பிடித்து தொடங்கி வைக்கின்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம். கடந்த ஆண்டு தேரோட்டத்தில் ஏற்பட்ட சிறு சிறு பிரச்சனை முழுமையாக களைந்து அனைத்து தேர்களையும் மரமாத்து செய்தும், புதிதாக ரூ.59 லட்சம் செலவில் சண்டிகேஸ்வரர் தேர் செய்யப்பட்டும், ரூ.43 இலட்சம் செலவில் சுவாமி தேர் விநாயகர் தேர் சுப்பிரமணிய தேர் சண்டிகேஸ்வரர் தேருக்கு புதிதாக மர குதிரைகள், மர பிரம்மா, அம்பாள் தேருக்கு மரத்தினால் ஆன பிரம்மா மற்றும் மறை யாழியும் செய்யப்பட்டுள்ளது. ரூ.6.50 இலட்சம் மதிப்பில் தேருக்கு புதிதாக வடக்கயிறுகள் வாங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இன்றைக்கு வீதி உலா வருகின்ற அனைத்து தேர்களும் புதுப்பிக்கப்பட்டு சிறந்த முறையில் இந்த தேரோட்டம் நடைபெறுவதற்கு மாவட்ட ஆட்சி தலைவர், மாநகராட்சி ஆணையர் ஆகியோர் திருத்தேர் உலா வரும் அனைத்து சாலைகளையும் செப்பனிட்டு உயரத்தில் மின்கம்பிகள் தடைபடாமல் இருப்பதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்துள்ளனர். எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு சிறப்போடு தேர் பவனி நடைபெறும் என்றார். இந்நிகழ்ச்சிகளில் தவத்திரு தருமபுர ஆதீனம், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சி. ராபர்ட் புரூஸ், உறுப்பினர்கள் மு. அப்துல் வஹாப், நயினார் நாகேந்திரன், .ரூபி ஆர். மனோகரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. சுகுமார், மாநகராட்சி ஆணையர் மருத்துவர் மோனிகா ராணா, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா. ஆவுடையப்பன், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர். ராஜு, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர். வி.எஸ்.ஆர். ஜெகதீஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி மா. சுகன்யா, மண்டல இணை ஆணையர் கவிதா பிரியதர்ஷினி, துணை ஆணையர் ஜான்சி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர்.எம். செல்லையா மற்றும் அறங்காவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# குற்றாலம் திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு



**தென்காசி ஜூலை.09:**

தென்காசி மாவட்டத்தில் குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோவில் மற்றும்-பராசக்தி மகளிர் கல்லூரி, பராசக்தி வித்யாலயா பள்ளி, ஆழ்வார்குறிச்சி சிவன் கோவில் ஆகியவற்றை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தென்காசி மாவட்டத்தில் குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோவில், பராசக்தி மகளிர் கல்லூரி, பராசக்தி வித்யாலயா பள்ளி மற்றும் ஆழ்வார்குறிச்சி சிவன்கோவில் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் முன்னிலையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது,


இந்து சமய அறநிலைத் துறையின் சார்பில் 25 பள்ளிகளும், 10 கல்லூரிகளும், 01 ஐடிஐ பிரிவும் செயல்பட்டு கொண்டிருக்கின்றது. மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போது இந்து சமய அறநிலைத் துறையின் சார்பில் நடைபெறுகின்ற பள்ளி, கல்லூரிகளில் ஆய்வு செய்வதை உறுதி செய்திட தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் திருச்செந்தூர் சுப்புரமணியசுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு, அருள்மிகு திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோவில், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, ஸ்ரீ பராசக்தி வித்யாலயா பள்ளி, கீழப்பாவூர், ஆழ்வார் குறிச்சி சிவன்கோவில் ஆகிய இடங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. கல்லூரியைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட 2800க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வருகிறார். ஸ்ரீ பராசக்தி வித்யாலயா (CBSE) பள்ளியில் 531 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 46 ஆசிரியர்களும், 7 ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் உள்ளனர்.

குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோவில் நிதி ரூ.900 இலட்சத்தில் புதிதாக 28 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 2 மற்றும் 3 ஆம் தளங்களில் 28 கூடுதல் வகுப்பறைகட்டிடங்கள் ரூ.748 இலட்சம் என மொத்தம் ரூ.1648 இலட்சம் செலவில் கட்டிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பள்ளி விடுதியில் 50 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர்.

திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோவிலை ரூ.270 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்து புதுப்பிக்கும் பணியும், ரூ.978 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணியும், ரூ.13.82 இலட்சம் செலவில் திருக்கோவில் நிர்வாக அலுவலகத்தின் மேற்கூரையினை மாற்றி அமைக்கும் பணியும், ரூ.14.90 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியும், ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் வண்ண கற்கள் பதிக்கும் பணியும், ரூ.72 இலட்சம் மதிப்பீட்டில் உதவிஆணையர் / செயல்அலுவலர் குடியிருப்பு கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி அனைத்து பணிகளையும் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்வோம்.

ஆய்வின் போது அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் கடையம் வடக்கு ஒன்றியம் சட்ட எரிப்பு போராட்டத்தில் 100 நாள் சிறை சென்ற அருணாசலம் பட்டி கிளை செயலாளர் பி.ராஜேந்திரன் கண் சிகிச்சைக்கு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் நிதி உதவி அளித்தார் உடன் மாவட்டத் துணைச் செயலாளர் கென்னடி, பொதுக்குழு ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் திவான் ஒலி, ஜே.கே.ரமேஷ் உள்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஸ்ட அக் ஹை - டெக் பள்ளியில் மாணவர் பேரவை பதவியேற்பு விழா



**தென்காசி ஜூலை.09**

இடைகால் ஸ்ட அக் ஹை - டெக் பள்ளியில் 2025-26 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் பேரவை பதவியேற்பு விழா பள்ளி தாளாளர் புனிதா செல்வி முன்னிலையில் நடைபெற்றது. விழாவில் பள்ளி மாணவர் தலைவராக மாணவர் செல்வகுமார், மாணவர் தலைவியாக மாணவி ஷைனி பியூலா, பள்ளியின் விளையாட்டுத் தலைவராக மாணவர் அக்சயகுமரன் ஆகியோர் பதவி ஏற்றுக் கொண்டனர். பள்ளியின் சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் மற்றும் பல்லவர்கள் அணிகளுக்கும் தலைவர் மற்றும் துணைத்தலைவர் முறையே கமிலஸ் ரோனி, சீதாலட்சுமி, ஶ்ரீ ராம், பிளஸ்சி சேன்ட்ரா, ஶ்ரீ கிருஷ்ணன், ஹரிணி, ஜூவான் கெவின், சாஸ்மித்தா ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர். இவர்களுக்கு பள்ளி தலைவர் முருகன், செயலாளர் ஆஷிஷ் லிங், முதல்வர் பிரவின் குமார் ஆகியோர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் தங்கள் பணியை செவ்வனே செய்து பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் பெருமை சேர்ப்போம் என பள்ளி மாணவர்கள் முன்னிலையில் உறுதிமொழி எடுத்து கொண்டனர்

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஊட்டி சோலாடா அரசு நடுநிலைப்பள்ளிக்கு பேராசிரியர் அன்பழகன் விருது: அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் வழங்கினர்



**ஊட்டி ஜூலை.09-**

நீலகிரி மாவட்டம், ஊட்டி, சோலாடா அரசு நடுநிலைப்பள்ளிக்கு பேராசிரியர் அன்பழகன் விருதினை அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் ஆகியோர் வழங்கினர்.

தமிழகத்தில் கல்வித்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு - தொடக்க,நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் சிறப்பாக செயல்படும் பள்ளிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பேராசிரியர் அன்பழகன் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுதொடக்கநடுநிலை பள்ளிகளில் ஒன்று மற்றும் உயர்நிலை, மேல்நிலைபள்ளிகளில் ஒன்று என தேர்வு செய்யப்பட்டு ஒரு மாவட்டத்திற்கு இரண்டு பள்ளிகள் வீதம் மொத்தம் 76 சிறந்த பள்ளிகளுக்கு வழங்கப்படுகிறது.

இதனடிப்படையில் 2024- 25ம் ஆண்டிற்கான பேராசிரியர் அன்பழகன் விருதுக்கு ஊட்டி ஒன்றியம் சோலாடா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தேர்வு செய்யப்பட்டது. பள்ளி கல்வித்துறை வழிகாட்டுதலின் படி மாணவர்களுக்கான பல் வேறு அரசின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. அண்மையில் திருச்சியில் பள்ளி கல்வித் துறை சார்பில் மாநில அளவில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் சோலாடா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு இதற்கான கேடயம் மற்றும் சான்றிதழை தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் மற்றும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு ஆகியோர் சோலாடா ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியின் தலைமை ஆசிரியை பியூலா ரோஸ்லினுக்கு வழங்கினார். மேலும் தமிழக அரசின் முன்னோடி திட்டமான எண்ணும் எழுத்தும் திட்டத்தை இப்பள்ளி சிறப்பாக செயல் படுத்தி மாணவர்களின் அடிப்படைத் திறன்களை சோதிக்கும் 100 நாள் சேலஞ்ச் என்ற செயல் பாட்டிலும் தேர்வு செய்யப்பட்டு அதற்கான சான்றிதழும் சோலாடா பள்ளிக்கு வழங்கப்பட்டது.

விருது பெற்ற பள்ளியை மாவட்ட கல்வி அலுவலர்,வட்டார கல்வி அலுவலர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள்,பெற்றோர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

**Enrollment notice**

After ten days of the publication of this notice and within three months there after I, MOHANALEELA.A, D/O ATHILINGAM .S , Aged 24 years , Permanently residing at No.1/244-66, Raghavendra Nagar, Pasuvanthanai colony , Pasuvanthanai ,Nagampatti. Thoothukudi district, Tamil Nadu -628718, intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamilnadu & Puducherry Bar Council Buildings, High Court Campus, Chennai-104.
Those Who Have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.
MOHANALEELA.A

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில், அ.தி.மு.ஆ1/194/2025**
மு. சங்கரவேல்,
த.பெ. முத்தையா,
க.எண். 65, சங்குபுரம் 3ம்தெரு,
சங்கரன்கோவில்.
மனுதார்,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
சங்கரன்கோவில்,
எதிர்மனுதாரர்,
அறிவிப்பு
எனது தாயார் சிலுவைக்கொடி, க.பெ. முத்தையா என்பவர் கடந்த 21.03.1982 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
மு. சங்கரவேல்,
சங்கரன்கோவில்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில், அ.தி.மு.ஆ1/428/2025**
ப.மாரியப்பன்,
த.பெ. பகவதி,
க.எண். 63, காந்தி நகர் 5ம்தெரு,
சங்கரன்கோவில்.
மனுதார்,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
சங்கரன்கோவில்,
எதிர்மனுதாரர்,
அறிவிப்பு
எனது தந்தை பகவதி, த.பெ. ராமன் என்பவர் கடந்த 14.10.1994 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
ப.மாரியப்பன்,
சங்கரன்கோவில்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில், அ.தி.மு.ஆ1/180/2025**
ச.காளிமுத்து,
த.பெ. சன்னாசி,
க.எண். 51, காந்தி நகர் 6ம்தெரு,
சங்கரன்கோவில்.
மனுதார்,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
சங்கரன்கோவில்,
எதிர்மனுதாரர்,
அறிவிப்பு
எனது தாயார் ஈஸ்வரி அம்மாள், க.பெ. சன்னாசி என்பவர் கடந்த 11.10.2023 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
ச.காளிமுத்து,
சங்கரன்கோவில்.

**கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், விருதுநகர் O.S.No: 133/2023**
பிரதீப்ராஜ், த/பெ.முத்துராஜா,
விருதுநகர்
... வாதி
- எதிரிடை -
தங்கராஜா, த/பெ.ராம்நாடார்,
5, சிங்கராஜா காம்பளக்ஸ்,
மேலப்பாவூர் ரோடு,
பாவூர்சத்திரம்,
தென்காசி மாவட்டம்.
... 3ம்பிரதிவாதி
மேற்படி வாதி கனம் நீதிமன்றத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக டெபாசிட் செய்த பணத்தினை திரும்ப தரக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு வருகிற 01.08.2025 அன்று ஷை 3ம்பிரதிவாதி ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி மனு குறித்து 3ம் பிரதிவாதிக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின், அன்றைய தேதி காலை 10.30 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர்கள் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மேற்படி 3ம்பிரதிவாதி வருகையின்றி மேற்படி வழக்கானது ஒருதலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
// நீதிமன்ற உத்திரவுப்படி //
K.சிலம்பு செல்வி B.A., B.L.,
வழக்கறிஞர், விருதுநகர்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில், அ.தி.மு.ஆ1/193/2025**
மு. சுப்பையா,
த.பெ. முத்தையா,
க.எண். 263/4, தெற்கு தெரு,
ஆட்கொண்டார்குளம், தெற்கு சங்கரன்கோவில் கிராமம்,
சங்கரன்கோவில் வட்டம்.
மனுதார்,
1. வட்டாட்சியர், சங்கரன்கோவில்,
2. சார் பதிவாளர், சங்கரன்கோவில்,
எதிர்மனுதாரர்,
அறிவிப்பு
எனது மனைவி சண்முகத்தாய், த.பெ. சிவனுக்கோனார் என்பவர் கடந்த 07.07.1999 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
மு. சுப்பையா,
ஆட்கொண்டார்குளம்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில், அ.தி.மு.ஆ1/143/2025**
கு. கருப்பசாமி,
த.பெ. குருசாமி,
க.எண். 4/100, கிழக்கு தெரு,
ரெங்கநாதபுரம்,
குலசேகரமங்கலம் கிராமம்,
சங்கரன்கோவில் வட்டம்.
மனுதார்,
1. வட்டாட்சியர், சங்கரன்கோவில்,
2. சார் பதிவாளர், வீரசிகாமணி,
எதிர்மனுதாரர்,
அறிவிப்பு
எனது தந்தை குருசாமி, த.பெ. சண்முகம் என்பவர் கடந்த 10.03.2008 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
கு. கருப்பசாமி,
ரெங்கநாதபுரம்.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
சங்கரம்மாள், கபெ. அழகப்பன்,
126/2, நடுத்தெரு,
து. தீத்தம்பட்டி, கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார் பதிவாளர், கோவில்பட்டி.
எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
எனது கணவர் அழகப்பன் என்பவர் கடந்த 26.04.2000. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
சங்கரம்மாள்.
மனுதார்,

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
மாரிச்செல்வம்,
தபெ. அய்யாத்துரை,
3/129V, சிவன்மலை நகர்,
குருநாதன் பாளையம், செவந்தம் பாளையம் தாலுகா, உகாயனூர் போஸ்ட், திருப்பூர் மாவட்டம்.
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், கயத்தார்.
சார் பதிவாளர், கயத்தார்.
எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
எனது பாட்டி லட்சுமி கபெ. சங்கு மூப்பனார் என்பவர் கடந்த 15.01.1988.அன்று சக்தி விநாயகர் கோவில் தெரு, கயத்தார் கயத்தார் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
மாரிச்செல்வம்,
மனுதார்,

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
மாரிச்செல்வம்,
தபெ. அய்யாத்துரை,
3/129V, சிவன்மலை நகர்,
குருநாதன் பாளையம், செவந்தம் பாளையம் தாலுகா, உகாயனூர் போஸ்ட், திருப்பூர் மாவட்டம்.
மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், கயத்தார்.
சார் பதிவாளர், கயத்தார்.
எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
எனது தாத்தா சங்கு மூப்பனார் தபெ. வெள்ளைய மூப்பனார் என்பவர் கடந்த 01.05.1986.அன்று சக்தி விநாயகர் கோவில் தெரு, கயத்தார் கயத்தார் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
இப்படிக்கு
மாரிச்செல்வம்,
மனுதார்,

# அமைச்சர் ஆவடி சா.மு நாசரிடம் பேவர்பிளாக் சாலை அமைத்து தர கடையநல்லூர் நகரமன்ற தலைவர் கோரிக்கை



**தென்காசி,ஜூலை.09-**

சென்னை தலைமைச் செயலகத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசரை கடையநல்லூர் நகரமன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் நேரில் சந்தித்து கடையநல்லூரில் வார்டுஎண்12 ல் அமைந்துள்ள நைனா முகமது ஜும்மா பள்ளிவாசல், பேட்டை காதர்மூகைதீன் குத்பா பள்ளிவாசல், வார்டு எண் 25ல் பெரிய தெருவில் அமைந்துள்ள நைனா முகம்மது பெரிய குத்பா பள்ளிவாசல், வார்டுஎண்21 ல் அல்லிமூப்பன் தெருவில் அமைந்துள்ள கீழத்தெரு நைனா முகம்மது ஜும்மா பள்ளிவாசல் அனைத்திற்கும் பேர்வல், மையவாடி சுற்று சுவர் ,மற்றும் ஜானசாவை கொண்டு செல்ல பேவர் பிளாக் சாலை அமைத்து தர வேண்டி கோரிக்கை மனுவினை அமைச்சரிடம் வழங்கினார்

# தென்காசி யு.எஸ்.பி. மெட்ரிக் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம்



**தென்காசி ஜூலை.09:**

தென்காசி யுஎஸ்பி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டமானது பள்ளியின் கலையரங்கத்தில் நடைபெற்றது. காலை 11 மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 10 11 மற்றும் 12-ம் வகுப்பு மாணவிகளின் இறை வணக்கத்துடன் இக்கூட்டம் தொடங்கியது.பள்ளி தாளாளர் செல்வராஜ், செயலாளர் சகாய செல்வமேரி இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். மாணவர்கள் சிலர் பள்ளியை பற்றி பேசினர். பள்ளி முதல்வர் அந்தோணி பால்ராஜ் இக்கல்வி ஆண்டில் நடைபெறக்கூடிய நிகழ்வுகள் மற்றும் பெற்றோர்கள் மாணவர்களுக்கு அறிவுரைகள் வழங்கியும் சிறப்பு உரையாற்றினார். பெற்றோர்களின் முன்னிலையில் மாணவர்கள் அலைபேசியில் கேம்ஸ் விளையாட மாட்டோம் என்று உறுதிமொழி எடுத்தனர். பெற்றோர்கள் தங்கள் பள்ளியில் இருந்து என்ன எதிர்பார்க்கிறோம் என்பதை கூட்டத்தில் பகிர்ந்து கொண்டனர். மாணவர்களிடமும் சில கருத்துக்கள் கேட்கப்பட்டது. துணை முதல்வர் அபுதாஹிர் நன்றியுரை வழங்கினார். பெற்றோர்கள் கூட்டத்தில் உற்சாகத்துடன் கலந்து கொண்டது சிறப்பு அம்சமாக இருந்தது. கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்த தாளாளர் செயலாளர் முதல்வர் மற்றும் ஆசிரியர்களை பெற்றோர்கள் வாழ்த்தி பாராட்டினர்.

# ட்ரஷர் ஐலண்ட் பள்ளியில் இணைய பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு



**செங்கோட்டை ஜூலை.09:**

ஜூலை மாதத்தின் கருத்துருவாக தேர்வு செய்யப்பட்ட இணைய பாதுகாப்பு குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ட்ரஷர் ஐலண்ட் பள்ளியில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சி ஒரு பயனுள்ள மேற்கோளும், இணையத்தை பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டிய அவசியம் குறித்து உரையுடன் துவங்கப்பட்டது. பின்னர் ஆசிரியைகள் வினோதா, ராஹிபல், கார்த்திகா, பிரியதர்ஷினி , இணையதள கடவுச்சொல் பாதுகாப்பு, மற்றும் தனிப்பட்ட தகவல்களை பகிர்வதிலுள்ள அபாயங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறிய நாடகத்தை) நிகழ்த்தினர். இதில் சைபர் குற்றங்கள், மற்றும் சமூக ஊடகங்களை நாகரிகமாகப் பயன்படுத்துவது போன்ற தலைப்புகள் குறித்து மாணவர்களுக்கு தெளிவாக விளக்கப்பட்டது. பின்னர் பள்ளி தாளாளர் ஷேக் செய்யது அலி இணையம் ஒரு இருமுனை கத்தி என்றும் அதை கவனமாக கையாளவே இந்நிகழ்வு நடைபெறுவதாகவும் கூறினார். பள்ளி முதல்வர் சமீமா பர்வீன் இணையத்தில் நாம் எப்போதும் விழிப்பாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்றும், சந்தேகமான செயல்களை உடனே புகார் செய்ய வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார். ஆசிரியர்கள் தயாரித்த இணைய பாதுகாப்பு சார்ந்த போஸ்டர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. நிகழ்ச்சி முடிவில், மாணவர்கள் அனைவரும் இணையத்தை பாதுகாப்பாகவும் பொறுப்புடன் பயன்படுத்துவோம் என்ற கூறினர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# மாற்றுத்திறனாளிகளுக்கான கனவுகள் மெய்ப்படும் நிகழ்ச்சி: கலெக்டர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது



**கன்னியாகுமரி,ஜூலை.09-**

கன்னியாகுமரி கலெக்டர் அலுவலக குறள் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகளுக்கான கனவுகள் மெய்ப்படும் நிகழ்ச்சியில் கலெக்டர் ஆர்.அழகுமீனா, தலைமையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவிக்கையில்-

தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், தொழில் முனைவோர்கள், பொதுமக்கள் உள்ளிட்டவர்களின் தேவைகளை அறிந்து அவர்களின் கனவுகள் மெய்ப்பட வேண்டுமென்ற நோக்கத்தில் கனவுகள் மெய்ப்பட திட்டத்தினை செயல்படுத்தி அவர்களின் கனவுகளை நிறைவேற்றி வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கனவுகள் மெய்ப்பட திட்டத்தின்கீழ் மாதந்தோறும் 15 நாட்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு துறையின் வாயிலாக கனவுகள் மெய்ப்படும் கன்னியாகுமரி என்ற சிறப்பு முன்னெடுப்பின் வழி, பல தரப்பு மக்களிடம் கலந்துரையாடி அவர்களது தேவைகளை அறிந்து, தகுதியான நபர்கள் அனைவரும் அரசு திட்டங்களின் மூலம் பயன் பெற ஏதுவாக அரசு வழங்கும் பலநலத்திட்டங்களை எடுத்துரைத்து, அவர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்கி, அவர்களது கனவுகளை நிறைவேற்றி வருகிறது.

அதன்ஒருபகுதியான இன்று மாற்றுத்திறனாளிகளின் நிலையான வாழ்வாதாரதிற்காக, தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்களில் பூ கட்டுதல் மற்றும் கைவினை பொருட்கள் பயிற்சிபெற விருப்பம் தெரிவித்த 30 மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பத்தார் மற்றும் பெற்றோருடன் கலந்துரையாடப்பட்டது. நமது மாவட்டத்தில் தயார் செய்யப்படும் மாணிக்கமாலையானது புவிசார் குறியீடு (Geographical Index) பெற்றுள்ளது. இம்மாணிக்கமாலையானது திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவில், போன்ற சிறப்பு மிக்க கோவில்களிலும், திருமணம், வரவேற்பு, போன்ற வற்றிலும் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

மேலும், கனவுகள் மெய்ப்பட கன்னியாகுமரி திட்டத்தில் கண்டறியபட்டுள்ள 30 மாற்றுத்திறனாளிகள்/ மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர் அடங்கிய குழுவிற்கு மாணிக்கமாலை தொடுத்தல், சானிடரி நாப்கின் தயாரிக்கும் பயிற்சி, போன்ற பலவகை பயிற்சிகளுக்கும், ஆடு மாடு கோழி வளர்ப்பிற்கு வங்கி கடன் வழங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டதோடு, அத்திட்டங்களில் இணைந்து பயனடைவதற்கான வழிகாட்டுதல் வழங்கப்பட்டது.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டதோடு, அவர்களின் தொழில் ஈடுபாடுகள் குறித்தும் கேட்டறியப்பட்டது. அவர்களில் மிகுந்த தேவையுள்ள 3 மாற்றுத்திறனாளி பெண்களுக்கு 3 தையல் இயந்திரம் உடனடியாக வழங்கப்பட்டது. இவ்வாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள். தொடர்ந்து தையல் இயந்திரம் உடனடியாக கிடைக்கப்பெற்றதன் வாயிலாக தங்களது கனவுகள் மெய்ப்பட்டதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், கலெக்டர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தினேஷ் சந்திரன், மரு.பவித்ரா, துறை அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

புல்லுக்காட்டுவலசை ஊரணியில்

# புதிய படகு சவாரி சேவைகள் துவக்கம்



**தென்காசி,ஜூலை.09-**

தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி, புல்லுக்காட்டுவலசை ஊரணியில் தமிழ்நாடு சுற்றுலாதுறையின் விளையாட்டு சாகச பூங்கா அனுமதி பெற்று இயங்கி வரும் திரில் பார்க் சார்பில் புதிய படகுசவாரி சேவைகள் சிறப்பாக துவங்கியுள்ளன,

இதில் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் துணை சேர்மன் முத்து குமார், குண ராம நல்லூர் பஞ்சாயத்து தலைவர் சுபா சக்தி, குணராம நல்லூர் பஞ்சாயத்து துணை தலைவர் திருப்பதி ராமர், வார்டு மெம்பர் தமிழ்செல்வன், மாரிமுத்து, உதவி சுற்றுலா அலுவலர் சந்திரகுமார், த்ரில் பார்க் நிறுவனர் ,ஊர் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள், இந்த விழாவில் பங்கேற்று, குண ராமநல்லூர் பஞ்சாயத்து தலைவர் . சுபா சக்தி கொடி அசைத்து சிறப்பாகத் தொடங்கி வைத்தனர்.இந்த அழகிய ஊரணி பகுதியில், இளைஞர்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்தினர் அனைவரும் இன்புறக்கூடிய வகையில் சாகச அனுபவங்கள் காத்திருக்கின்றன இந்த புதிய முயற்சி சுற்றுலா வளர்ச்சிக்கு புதிய திசையை தரும் என்று மக்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

# கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு கிராமப் பகுதி சுகாதார செவிலியர் சங்கங்களின் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம்

**ஈரோடு, ஜூலை. 9-**

தமிழ்நாடு கிராம பகுதி சுகாதார செவிலியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பெருந்திரள் முறையீடு மாவட்ட தலைவர்கள் சாந்தா, லதா,காஞ்சனா ஆகியோர் கூட்டு தலைமையில் நடந்தது.

வள்ளியம்மாள், செல்வராணி, சரஸ்வதி, அமுதா, கவிதா மணி, லோகநாயகி ஆகியோர் முன்னிலை வைத்தனர். கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் செந்தாமலர், உஷாராணிஆகியோர் கோரிக்கை விளக்க உரையாற்றினர். பிற சங்க நிர்வாகிகள் வெங்கிடு, தங்கராஜ்,ரங்கசாமி, ராஜசேகர் உட்பட பலர் பேசினர்.

திண்டுக்கல்லில் நடந்த பிரஸ் மீட்டில், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், கிராம சுகாதார செவிலியர்கள் பற்றி உண்மைக்கு மாறாக பேசியதை திரும்ப பெற வேண்டும். கிராம சுகாதார செவிலியர்களின் காலி துணை மையப் பணியிடங்களை இவ்வித நிபந்தனையும் இன்றி போர்க்கால அடிப்படையில் நிரப்பிட வலியுறுத்தியும் அப்பணியிடங்களில்பயிற்சி பெற்று பணிக்காக காத்திருக்கும் கிராம சுகாதார செவிலியர்களை பணி அமைத்திட வலியுறுத்தியும்,தடுப்பூசி பணிகளை தனியார் மையமாக்கும் தமிழக அரசின் கொள்கை முடிவுகளை திரும்ப பெற வலியுறுத்தியும் ,புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்த வலியுறுத்தியும் சுகாதாரத் துறையில் பணிபுழு காரணமாக மன உளைச்சலை ஏற்படுத்துகின்ற நிலையை தவிர்த்திட வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

**மழைநீர் உயிர்நீர்**

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை
கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.அ6/840 / 2025 / நாள்: 02.07.2025

கடலூர் மாவட்டம் கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களால் 2025-26 ஆம் ஆண்டு 15 வது நிதிக் குழு சுகாதார தலைப்பின் கீழ் கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், விளாகம் ஊராட்சியில் கீழ்காணும் பணியினை செயல்படுத்திட நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|
| 1. | Construction of Additional Building to Rural Primary Health Centre at Vilagam Panchayat. | 78.20 | 6 மாதம் |
| | கூடுதல் | 78.20 | |

சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில் 15.07.2025 முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்.

| | | |
|---|---|---|
| அ) | மின்ஒப்பந்தப்புள்ளிகள் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | 23.07.2025 மாலை 3.00 மணி வரை |
| ஆ) | மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 23.07.2025 மாலை 5.00 மணி முதல் |

செ.ம.தொ.இ / 3485 / ஒப்பந்தப்புள்ளி / 2025 வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) கீரப்பாளையம்

**கருங்குளம் ஊராட்சி ஒன்றியம்**
தூத்துக்குடி மாவட்டம்.
அ3/1775/2025 நாள்: 02.07.2025

**ஏல அறிவிப்பு**

கருங்குளம் ஊராட்சி ஒண்றியம், செய்துங்கநல்லூர் வாரச்சந்தைஏலம் 2025 - 2026 ம் ஆண்டிற்கு (01.08.2025 முதல் 31.07.2026 வரை) பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கருங்குளம் ஆராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வைத்து 28.07.2025 தேதியன்று காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.
அரசு ஆரம்ப ஏலத்தொகை ரூ.21,28,650/=

நிபந்தனைகள்

1. ஏலம் கேட்த விரும்புபவர்கள் ரூ.1,00,000/= க்கு டேவனித்தொகையை D.D. வங்கி வரைவோலையாக ஆணையாளர், கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் என்ற முகவரிக்கு எடுத்து வழங்கபடவேண்டும்.
2. ஏலம் கேட்த விரும்புபவர்கள் GST எண், PAN கார்டு ஆகியவை கண்டிப்பாக கொண்டு வர வேண்டும். இல்லாதவர்கள் ஏலத்தில் அனுமதிக்க மாட்டார்கள்.
3. ஏலம் எடுத்தவர்கள் ஏலத்தொகையினை முழுவதும் அன்றைய தினமே ஊராட்சி ஒன்றியத்தில் செலுத்தபடவேண்டும்.
4. ஏலத்தொகையினை உடன்கட்ட தவறினால் ஏலம் இரத்து செய்யப்படும். செலுத்திய டேவனித்தொகை பறிமுதல் செய்வதோடு உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கபடும்.
5. ஏலத்தொகைக்கு 18% GST (சரக்கு மற்றும் சேவை) வரியும் கண்டிப்பாக அன்றையதினமே செலுத்த வேண்டும்.
6. ஏலம் நடத்தும் அலுவலர் அல்லது ஏலம் நடத்தும் அலுவலரால் அங்கீகாரம் பெற்ற அலுவலரால் ஏலம் நடத்தபடும்.
7. டேவணித் தொகை செலுத்திய நபர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கபடுவார்கள். மாற்றுநபர்கள் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
8. ஏலத்தில் கலந்து கொள்ள டேவனித்தொகை செலுத்தியவர்கள் கண்டிப்பாக அடையாள அட்டை (ADHAR CARD) கொண்டு வரவேண்டும்.
9. ஏலத்தேதியை மாற்றியமைக்கவோ அல்லது ரத்து செய்யவோ ஆணையாளகுக்கு முழு அதிகாரம் உண்டு.
10. ஏலம் எடுத்தவர்கள் அன்றைய தினமே ஒப்பந்த ஆவணம் வழங்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

ஆணையாளர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
கருங்குளம்.

வெ.ஆ.எண். 126/செ.ம.தொ/2025/
நாள்.08.07.2025

### சி.எஸ்.கே. 3-வது இடத்துக்கு சரிந்தது:

# ஐ.பி.எல். பிராண்ட் மதிப்பில் ஆர்.சி.பி. அணிக்கு முதலிடம்



**மும்பை, ஜூலை 09-**
ஆர்.சி.பி. அணியின் பிராண்ட் மதிப்பு 227 மில்லியனாக இருந்து 269 மில்லியனாக அதிகரித்துள்ளது. இந்த பட்டியலில் முதல் இடத்தில் இருந்த சென்னை அணி 3-வது இடத்திற்கு சரிந்துள்ளது.

**ஐ.பி.எல்.வணிக மதிப்பு...**
உலகளாவிய முதலீட்டு வங்கி ஹௌலிஹான் லோகி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி ஐ.பி.எல். (இந்தியன் பிரிமீயர் லீக்) வணிக மதிப்பு இந்த வருடம் 12.9% உயர்ந்து 18.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது. கடந்த ஆண்டை விட 13.8 சதவீதம் உயர்ந்து இந்திய மதிப்பில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது.

**25 சதவீதம் அதிகம்...**
அசோசியேட் ஸ்பான்சர் எனும் இடங்களை மட்டுமே மை 11 சர்க்கிள்,ஏஞ்சல் ஒன், ரூ பே மற்றும் சியட் - டயருக்கு விற்பனை செய்ததன் மூலம், பி.சி.சி.ஐ. ரூ.1,485 கோடியை வருவாயாக ஈட்டியுள்ளது. இது முந்தைய சுழற்சியை விட 25 சதவீதம் அதிகமாகும். டாடா குழுமம் தனது டைட்டில் ஸ்பான்சர்ஷிப்பை 2028 வரை நீட்டித்தது. இதற்காக அந்த நிறுவனம் 300 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அதாவது இந்திய மதிப்பில் சுமார் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாயை கொட்டிக் கொடுத்துள்ளது.

**முதலிடத்தில் ஆர்.சி.பி....**
ஆர்.சி.பி. அணியின் பிராண்ட் மதிப்பு 2024-ல் 227 மில்லியனாக இருந்தது. தற்போது 269 மில்லியனாக உயர்ந்தது. மும்பை இந்தியன்ஸ் (மும்பை) 242 மில்லியனுடன் 2-வது இடத்திற்கும், சி.எஸ்.கே. 235 மில்லியனுடன் 3-வது இடத்திலும் உள்ளது. குறிப்பாக பஞ்சாப் அணியின் பிராண்ட் வேல்யூ கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 39.6 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இது மற்ற எந்த அணியை காட்டிலும் மிகவும் அதிகமாகும்.

# லெஜெண்டின் சாதனை அவரிடமே இருக்கட்டும்: வியான் முல்டர்

**புலவாயோ, ஜூலை 09-**
தென்னாப்பிரிக்க வீரர் வியான் முல்டர் டெஸ்ட்டில் பிரையன் லாராவின் உலக சாதனையை முறியடிக்காமல் விட்டுக்கொடுத்து அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளார்.

**முச்சதம் விளாசல்...**
தென்னாப்பிரிக்கா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான இரண்டாவது, கடைசி டெஸ்ட் போட்டி குயின்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் திடலில் ஜூலை 6-இல் தொடங்கியது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஜிம்பாப்வே அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, தென்னாப்பிரிக்கா அதன் முதல் இன்னிங்ஸில் 626/5 ரன்கள் எடுத்திருக்கையில் டிக்ளேர் செய்தது. தென்னாப்பிரிக்க அணியின் கேப்டன் வியான் முல்டர் முச்சதம் விளாசி அசத்தினார்.

**டிக்ளேர்...**
அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் 334 பந்துகளில் 367* ரன்கள் எடுத்திருந்தார். பிரையன் லாராவின் 400* சாதனையை முறியடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் டிக்ளேர் செய்தது அதிர்ச்சியாக விருந்தது.

**லெஜெண்ட்...**
இது குறித்து செய்தியாளர் சந்திப்பில் வியான் முல்டர் பேசியதாவது: பிரையன் லாரா ஒரு லெஜெண்ட். அவர் 400 ரன்களோ 401 ரன்களோ இங்கிலாந்துக்கு எதிராக அடித்தார். அவர் இருந்த உயரத்துக்கு அவரது சாதனை அப்படியே இருப்பதுதான் சிறப்பானது.

**மீண்டும் செய்வேன்...**
எனக்கு மீண்டும் 400 ரன்கள் அடிக்கும் வாய்ப்பு கிடைத்தாலும் இதையே தான் செய்வேன். இந்த முடிவுக்கு எனது பயிற்சியாளர் சுக்ரி கான்ராட்டும் சம்மதித்தார். 'லெஜெண்டின் சாதனை அவரிடமே இருக்கட்டும். என்னுடைய விதி நான் என்னாகுவேன் எனத் தெரியாது. ஆனால், பிரையன் லாராவின் சாதனை அவரிடமே இருக்க விடுவதுதான் நல்லது' எனப் பயிற்சியாளரும் கூறியதாக வியான் முல்டர் கூறினார். இந்த நெகிழ்ச்சியான சம்பவத்துக்கு உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் வியான் முல்டருக்கு வாழ்த்துகளைப் பகிர்ந்து வருகிறார்கள்.

### 3-வது டெஸ்ட் போட்டி:

# பும்ராவுக்கு பிரசித் கிருஷ்ணா வழி விட வேண்டும்: கவாஸ்கர்

**லண்டன், ஜூலை 09-**
3-வது டெஸ்ட் போட்டியில், பும்ராவுக்கு பிரசித் கிருஷ்ணா வழி விட வேண்டும் என முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

**இமாலய வெற்றி...**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் லீட்ஸில் நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இதனையடுத்து பர்மிங்காமில் நடந்த 2-வது டெஸ்டில் இந்தியா 336 ரன்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றியை ருசித்தது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியுள்ளது.

**ஜஸ்பிரித் பும்ரா...**
இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்சில் நாளை (வியாழக்கிழமை) தொடங்குகிறது. கடந்த போட்டியில் (2-வது போட்டியில்) களமிறக்கப்படாத ஜஸ்பிரித் பும்ரா இந்த போட்டியில் களமிறங்குவார் என்று இந்திய கேப்டன் சுப்மன் கில் உறுதியளித்துள்ளார். இதன் காரணமாக இந்திய அணியின் பிளேயிங் லெவனில் என்னென்ன மாற்றங்கள் நிகழும் என்று அனைவரும் எதிர்பார்த்துள்ளனர்.

**2 மாற்றங்கள்...**
இந்நிலையில் இந்த 3-வது போட்டிக்கான இந்திய அணியின் பிளேயிங் லெவனில் 2 மாற்றங்களை செய்ய வேண்டும் என முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், "சிராஜ் மற்றும் ஆகாஷை அணியிலிருந்து நீக்க முடியாது. அவர்கள் இருவரும் இணைந்து 17 விக்கெட்டுகள் (2-வது போட்டியில்) வீழ்த்தியுள்ளனர். பும்ராவுக்கு பிரசித் கிருஷ்ணா வழி விட வேண்டும். ஏனெனில் 2-வது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் அவர் அதிக ரன்களை விட்டுக்கொடுத்தார். மேலும் தொடரின் தொடக்க ஆட்டத்திலும் நிறைய ரன்களை விட்டுக்கொடுத்தார். அதே போல் நிதிஷ் ரெட்டிக்குப் பதிலாக குல்தீப் யாதவை சேர்க்க வேண்டும். இது இந்தியாவுக்கு மற்றொரு பந்து வீச்சு விருப்பத்தை வழங்கும்" என்று கூறினார்.

# கில்லுக்கு ரவி சாஸ்திரி புகழாரம்

**மும்பை, ஜூலை 09-**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2-வது போட்டி பர்மிங்காமில் கடந்த 2-ந்தேதி தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இந்தியா 587 ரன்களும், இங்கிலாந்து 407 ரன்களும் குவித்தன. 180 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை ஆடிய இந்தியா 6 விக்கெட்டுக்கு 427 ரன்னில் 'டிக்ளேர்' செய்து 608 ரன்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

**அட்டகாச வெற்றி...**
பின்னர் இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சில் 68.1 ஓவர்களில் 271 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. இதனால் இந்தியா 336 ரன்கள் வித்தியாசத்தில் அட்டகாசமான வெற்றியை பெற்றது. இங்கிலாந்து தரப்பில் ஜேமி சுமித் 88 ரன்கள் அடித்தார். வேகப்பந்து வீச்சாளர் ஆகாஷ் தீப் 6 விக்கெட்டுகளை அள்ளினார். கேப்டன்சி மட்டுமின்றி பேட்டிங்கிலும் அசத்திய முதல் இன்னிங்சில் இரட்டை சதமும், 2-வது இன்னிங்சில் சதமும் அடித்த இந்திய கேப்டன் சுப்மன் கில் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

**பாராட்டு...**
இந்நிலையில் 0-1 என பின் தங்கியிருந்த இந்தியாவை டான் பிராட்மேன் போல விளையாடி கேப்டன் சுப்மன் கில் தூக்கி நிறுத்தியதாக முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி பாராட்டியுள்ளார். அத்துடன் அவரது கேப்டன்சியும் சிறப்பாக உள்ளதாக பாராட்டும் அவர் இது குறித்து பேசியது பின்வருமாறு:-

**10க்கு 10...**
"ஒரு கேப்டனின் சிறந்த செயல்பாடு. சுப்மன் கில் கேப்டன்சிக்கு 10க்கு 10 மார்க் கொடுக்கலாம். ஒரு கேப்டனிடமிருந்து இதைவிட வேறு எதையும் நீங்கள் எதிர்பார்க்க முடியாது. நீங்கள் தொடரில் 1 - 0 என்ற கணக்கில் கீழே இருந்த போது அவர் பிராட்மேன் போல பேட்டிங் செய்து 269 மற்றும் 161 ரன்கள் அடித்தார். இறுதியில் நீங்கள் ஆட்டத்தை வென்றீர்கள்.

**முன்னேற்றம்...**
முதல் டெஸ்ட் போட்டியில் அவரது கேப்டன்சி மிகவும் எதிர்வினையாற்றியது. ஆனால் அடுத்த போட்டியில் அவர் மிகவும் முன்னேற்றத்துடன் செயல்படுகிறார். அத்துடன் இங்கிலாந்து மண்ணில் அவர்களுடைய வீரர்களை திணறடிக்க கூடிய ஆகாஷ் தீப் போன்றவரை தேர்ந்தெடுத்ததன் மூலம் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களை நீங்கள் கண்டுபிடித்துள்ளீர்கள்" என்று கூறினார்.

## கவுண்டி கிரிக்கெட்டில் தமிழக வீரர்

தமிழக இடது கை சுழற்பந்து வீச்சாளரான சாய் கிஷோர் இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட்டில் விளையாட ஒப்பந்தமாகியுள்ளார். அதன்படி சாய் கிஷோர் இங்கிலாந்தை சேர்ந்த சர்ரே கவுண்டி அணிக்காக விளையாட உள்ளார். அதில் அவர் சர்ரே அணிக்காக அடுத்த இரு கவுண்டி சாம்பியன்ஷிப் போட்டிகளில் களம் காண உள்ளார். இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட்டில் ஏற்கனவே ரவிச்சந்திரன் அஸ்வின், வாஷிங்டன் சுந்தர், சாய் சுதர்சன் போன்ற தமிழக வீரர்கள் களமிறங்கியுள்ளனர். அந்த வரிசையில் தற்போது சாய் கிஷோரும் விளையாட உள்ளார்.
திறமை வாய்ந்த வீரரான சாய் கிஷோர் ஐ.பி.எல். தொடரில் குஜராத் அணிக்காக சிறந்த செயல்பாடுகளை வெளிப்படுத்தி வருகிறார். அதுமட்டுமின்றி உள்ளூர் தொடர்களிலும் கவனம் ஈர்த்து வருகிறார். அதன் காரணமாக அவருக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. அண்மையில் முடிவடைந்த தமிழ்நாடு பிரீமியர் லீக் தொடரில் இவரது தலைமையிலான திருப்பூர் தமிழன்ஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

## தொடரை வென்ற தெ.ஆப்பிரிக்கா

தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே இடையிலான 2-வது டெஸ்ட் புலவாயோவில் நடைபெற்றது. டாஸ் வென்ற ஜிம்பாப்வே பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்க அணி 5 விக்கெட் இழப்பிற்கு 626 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. கேப்டன் வியான் முல்டர் முச்சதம் அடித்து அசத்தினார். அவர் 367 ரன்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து, முதல் இன்னிங்ஸ் ஆடிய ஜிம்பாப்வே அணி 170 ரன்னில் சுருண்டது. 456 ரன்கள் பின்தங்கியதால் தென் ஆப்பிரிக்கா பாலோ-ஆன் கொடுத்தது. சீன் வில்லியம்ஸ் ஆட்டமிழக்காமல் 88 ரன்கள் எடுத்தார்.
இந்நிலையில், ஜிம்பாப்வே அணி இரண்டாவது இன்னிங்சில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் கைடனோ 40 ரன்னில் அவுட்டானார். அடுத்து இறங்கிய நிக் வெல்ச் அரை சதம் கடந்து 55 ரன்னில் வெளியேறினார். கேப்டன் கிரெய்க் எர்வின் 49 ரன்னில் ஆட்டமிழந்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. இறுதியில், ஜிம்பாப்வே அணி 2வது இன்னிங்சில் 220 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 236 ரன்கள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்கா அபார வெற்றி பெற்று டெஸ்ட் தொடரை 2-0 என கைப்பற்றி அசத்தியது.

## கோலிக்கு ஜோகோவிச் நன்றி

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் 4-வது ஆட்டம் ஒன்றில் 7 முறை சாம்பியனும், 6-ம் நிலை வீரருமான நோவக் ஜோகோவிச் (செர்பியா), தரவரிசையில் 11-வது இடத்தில் உள்ள அலெக்ஸ் டி மினாரை (ஆஸ்திரேலியா சந்தித்தார். இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 1-6, 6-4, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் அலெக்ஸ் டி மினாரை வெளியேற்றி 16-வது முறையாக காலிறுதிக்கு முன்னேறினார்.
ஜோகோவிச்சின் ஆட்டத்தை, இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி மற்றும் அவருடைய மனைவி அனுஷ்கா சர்மா நேரில் கண்டு களித்தனர். இதனையடுத்து ஜோகோவிச் வெற்றி பெற்றதும் அவருக்கு வாழ்த்து தெரிவித்து விராட் கோலி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டார். அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் விராட் கோலி பதிவிட்ட புகைப்படத்தை ஜோகோவிச் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 'உங்கள் ஆதரவுக்கு நன்றி' என்ற தலைப்புடன் பதிவிட்டார்.

## ஐ.சி.சி. புதிய தலைமை அதிகாரி

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.). தலைமை செயல் அதிகாரியாக இருந்த ஆஸ்திரேலியாவின் ஜெப் அலார்டிஸ் சில மாதங்களுக்கு முன்பு தனிப்பட்ட காரணங்களுக்காக விலகினார். இந்த நிலையில் புதிய செயல் அதிகாரியாக இந்தியாவின் சஞ்ஜோக் குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.
சஞ்சோக் குப்தா தற்போது ஜியோஸ்டாரில் விளையாட்டு மற்றும் நேரடி அனுபவங்கள் பிரிவின் தலைமை நிர்வாக அதிகாரியாக பணியாற்றுகிறார். சஞ்ஜோக், ஐ.சி.சி. யின் 7-வது தலைமை செயல் அதிகாரி ஆவார்.

## இங்கிலாந்து அணியில் அட்கின்சன்

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இந்த டெஸ்ட் தொடரின் தொடக்கத்திலிருந்தே இங்கிலாந்து அணியின் பந்துவீச்சு வலுவானதாக இல்லை என விமர்சிக்கப்பட்டது. அதன் பின், முதல் போட்டிக்குப் பிறகு இங்கிலாந்து அணியில் வேகப் பந்துவீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் சேர்க்கப்பட்டார். ஆனால், அவர் இரண்டாவது போட்டியில் விளையாடவில்லை.
இந்த நிலையில், இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் வேகப் பந்துவீச்சாளர் கஸ் அட்கின்சன் சேர்க்கப்பட்டுள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணி விவரம்: பென் ஸ்டோக்ஸ், ஜோஃப்ரா ஆர்ச்சர், கஸ் அட்கின்சன், சோயப் பஷீர், ஜேக்கோப் பெத்தேல், ஹாரி ப்ரூக், பிரைடான் கார்ஸ், சாம் குக், ஸாக் கிராலி, பென் டக்கெட், ஜேமி ஓவர்டான், ஆலி போப், ஜோ ரூட், ஜேமி ஸ்மித், ஜோஷ் டங், கிறிஸ் வோக்ஸ். இந்தியா - இங்கிலாந்து இடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி லார்ட்ஸில் நாளை (ஜூலை 10) தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

## ஆகாஷ் தீப்புக்கு புகழாரம்




இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 336 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு கேப்டன் சுப்மன்கில்லின் அபாரமான பேட்டிங்கும் (430 ரன்), ஆகாஷ்தீப், முகமது சிராஜ் (17 விக்கெட்) ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சும் காரணமாக இருந்தது. இந்த டெஸ்டில் 10 விக்கெட் வீழ்த்திய (முதல் இன்னிங்சில் 4, 2-வது இன்னிங்சில் 6) ஆகாஷ் தீப்பை கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் பாராட்டி உள்ளார்.
இது தொடர்பாக அவர் கூறி இருப்பதாவது:- 2-வது இன்னிங்சில் ரிஷப்பண்ட், கே.எல்.ராகுல், ஜடேஜா ஆகியோர் சிறப்பாக பேட்டிங் செய்தனர். இந்த டெஸ்டில் இந்திய அணி இங்கிலாந்தை முற்றிலுமாக வெளியேற்றிய அணுகுமுறை நன்றாக இருந்தது. பந்து வீச்சாளர்கள் என்னை மிகவும் கவர்ந்தார்கள். அவர்கள் பந்து வீசிய நேர்த்தியை சொல்ல தேவையில்லை. ஆகாஷ்தீப் ஒரு தனித்துவமான பந்து வீச்சாளர். ஜோரூட்டை அவர் அவுட் செய்த பந்து தொடரின் சிறந்த பந்தாக இருக்கும் என்பது எனது கருத்தாகும். ஜான்டி ரோட்சை போல முகமது சிராஜ் கேட்ச் பிடித்ததை ரசித்தேன். இவ்வாறு டெண்டுல்கர் கூறி உள்ளார்.

# அ.தி.மு.க.,வை யாராலும் அசைத்து கூட பார்க்க முடியாது: இ.பி.எஸ்.




**கோவை, ஜூலை 09-**
''அ.தி.மு.க.,வை எந்த கொம்பனாலும் அசைத்து கூட பார்க்க முடியாது என்ற நம்பிக்கையை நாம் பெற்று இருக்கிறோம் என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தெரிவித்துள்ளார்.
கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் இருந்து அ.தி.மு.க., சார்பில் தேர்தல் பிரசாரம் நேற்று முன்தினம் துவங்கியது. இந்நிலையில் நேற்று (ஜூலை 08) கோவையில் நடந்த நிகழ்ச்சியில் இ.பி.எஸ்., பேசியதாவது: இந்தியாவிலேயே ஜனநாயகம் மிக்க ஒரு கட்சி என்றால் அது அ.தி.மு.க., தான். மக்களுக்கு சேவை செய்வதில் சிறப்பாக பணியாற்றுபவர்கள் உயர்ந்த இடத்திற்கு வரக் கூடிய ஒரே கட்சி அ.தி.மு.க., தான். நம்முடைய இயக்கத்தில் ஜாதி, மதத்திற்கு இடமே கிடையாது. அனைவரும் சகோதரத்துவத்துடன் பழகுகிறோம்.
இன்றைக்கு நமது தலைவர்கள் எந்த வழியில் பின்பற்றினார்களோ, நாம் அனைவரும் அதே வழியில் பின்பற்றி, நடந்து கொண்டு இருக்கிறோம். பல்வேறு இன்னல்கள், இடர்பாடுகள், துன்பங்கள், துயரங்களை நமது தலைவர்கள் சந்தித்து வரலாறு படைத்து, அந்த கட்சியை நம்மிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள்.
2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் வெற்றி பெற, நாம் அனைவரும் கூட்டுப் பொறுப்புடன் கடினமாக உழைக்க வேண்டும். அ.தி.மு.க.,வை எந்த கொம்பனாலும் அசைத்து கூட பார்க்க முடியாது என்ற நம்பிக்கையை நாம் பெற்று இருக்கிறோம். மீண்டும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகிய இருபெரும் தலைவர்கள் ஆட்சி அமைவதற்கு, அத்தனை நல்ல உள்ளங்களும், அத்தனை நிர்வாகிகளும் ஒன்றுபட்டு உழைத்து வெற்றி காண்போம். இவ்வாறு இ.பி.எஸ்., பேசினார்.
முன்னதாக நேற்று காலை கோவை நகரில் நடை பயிற்சி மேற்கொண்ட இபிஎஸ், வழியில் தென்பட்ட பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடினார். சிறு வியாபாரிகள், பொதுமக்களுடன் இயல்பாக பேசி கருத்துக்களை கேட்டறிந்தார். கோவை அ.தி.மு.க., அலுவலகமான இதய தெய்வம் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில், வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள் இ.பி.எஸ். முன்னிலையில் கட்சியில் இணைந்தனர்.

### நாடுதழுவி இன்று நடைபெறும்

# வேலைநிறுத்த போராட்டத்தில் பங்கேற்றால் கடும் நடவடிக்கை

### அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு அரசு எச்சரிக்கை

**சென்னை, ஜூலை 09-**
இன்று நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தில் பங்கேற்றால் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு ஊழியர்களுக்கு தமிழக தலைமை செயலாளர் முருகானந்தம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மத்திய தொழிற்சங்கங்கள் இன்று (புதன்கிழமை) பொது வேலை நிறுத்தம் அறிவித்துள்ளன.மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும். தொழிலாளர்களை வஞ்சிப்பதற்காக அமல்படுத்த உள்ள 4 சட்ட தொகுப்புகளை உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் நடக்கிறது.
தமிழ்நாட்டில் இந்த வேலைநிறுத்த போராட்டத்துக்கு தி.மு.க.வின் தொழிற்சங்கமான தொ.மு.ச., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு., இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற்சங்கமான ஏ.ஐ.டி.யூ.சி., காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த தொழிற்சங்கங்கள் உள்பட 13 தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்து உள்ளன.
இந்த பொது வேலை நிறுத்த போராட்டத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்பார்கள் என்று தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இன்று நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தில் பங்கேற்றால் சம்பள பிடித்தம் மற்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக தலைமை செயலாளர் முருகானந்தம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அரசுப் பணியில் பீகார் பெண்களுக்கு 35 சதவிகித ஒதுக்கீடு வழங்க முடிவு

**பாட்னா, ஜூலை 09-**
பீகார் பெண்களுக்கு அரசுப் பணிகளில் 35 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்க அம்மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் இந்தாண்டு இறுதியில் நடைபெறவுள்ள நிலையில், ஆளும் நிதிஷ் குமார் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பல திட்டங்களை அறிவித்துள்ளது. பீகார் முதல்வர் நிதிஷ் குமார் தலைமையில் நேற்று காலை நடைபெற்ற மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் 43 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பாக மாநில தலைமைச் செயலாளர் சித்தார்த் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
"மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் நலதிட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் என 43 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, பீகார் மாநில இளைஞர் ஆணையம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வெளி மாநிலங்களில் படிக்கும் மாணவர்கள், பணிபுரியும் இளைஞர்கள், உயர்கல்வி உதவி தேவைப்படும் இளைஞர்கள், வேலையில்லா இளைஞர்களுக்கு உதவும் வகையில் இந்த ஆணையம் செயல்படவுள்ளது.
பீகார் மாநில அரசுப் பணிகளில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பெண்களுக்கு 35 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. நேரடி நியமனத்தில் உள்ள அனைத்துப் பதவிகளுக்கும் இந்த இடஒதுக்கீடு பொருந்தும். யு.பி.எஸ்.சி. மற்றும் பி.பி.எஸ்.சி. தேர்வுகளின் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 50,000 மற்றும் ரூ. 1 லட்சம் வழங்கும் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது" என்றார்.

# விம்பிள்டன்: தப்பிய சின்னர்

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. உலகின் முதல் நிலை நிலை வீரரான ஜானிக் சின்னர் (இத்தாலி) 4-வது சுற்றில் பல்கேரியாவை சேர்ந்த 19-வது வரிசையில் உள்ள டிமிட் ரோவை எதிர் கொண்டார். இதன் முதல் செட்டை சின்னர் 3-6 என்ற கணக்கில் இழந்தார். 2-வது செட்டையும் அவர் 5-7 என்ற கணக்கில் தோற்றார். 3-வது செட்டில் 2-2 என்ற சமநிலை இருந்த போது டிமிட்ரோ காயத்தால் வெளியேறினார்.
இதனால் சின்னர் தோல்வியில் இருந்து அதிர்ஷ்டவசமாக தப்பினார். டிமிட்ரோவ் விலகியதால் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. சின்னர் கால்இறுதியில் 10-ம் நிலை வீரரான ஷெல்டனை சந்திக்கிறார். அமெரிக்காவை சேர்ந்த அவர் 4-வது சுற்றில் 3-6, 6-1, 7-6 (7-1), 7-5 என்ற கணக்கில் லாரன்சோ சோன்கோவை (இத்தாலி) தோற்கடித்தார்.

## கணிப்பு உயிர்ப்புடன் உள்ளது: வாகன்

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்சில் நாளை (வியாழக்கிழமை) தொடங்குகிறது.
இந்நிலையில் இந்த தொடரில் இங்கிலாந்து 3-1 என்ற கணக்கில் வெற்றி பெறும் என்ற தனது கணிப்பு இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறது என்று அந்த அணியின் முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன் தெரிவித்துள்ளார். இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், "இந்த வாரம் இந்தியா ரொம்ப நன்றாக விளையாடியது.. சிறப்பான ஆட்டம்.. ஆனால் இங்கிலாந்து 3-1 என்ற கணக்கில் வெற்றி பெறும் என்ற என்னுடைய கணிப்பு இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறது" என்று பதிவிட்டுள்ளார்.

# சினிமா CINI செய்திகள்

## சசிகுமாரின் 'ஃபிரீடம்' நாளை வெளியீடு




விஜய கணபதி பிக்சர்ஸ் சார்பில், பாண்டியன் பரசுராமன் தயாரிப்பில், சசிகுமார் மற்றும் லிஜோ மோள் ஜோஸ் நடிப்பில், கழுகு பட இயக்குநர் சத்யசிவா இயக்கத்தில், உருவாகியுள்ள படம் ஃபிரீடம்". இத்திரைப்படம் நாளை உலகமெங்கும் வெளியாகவுள்ள நிலையில், இப்படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பு சமீபத்தில் நடைபெற்றது. சசிக்குமார் நாயகனாக, மாறுபட்ட வேடத்தில் இப்படத்தில் நடித்துள்ளார்.

பாலிவுட் படங்களில் மிரட்டும் சுதேவ் நாயர் இப்படத்தில் வில்லனாக நடித்துள்ளார்.

தமிழில் பல பிரமாண்ட படங்களில் நிர்வாகத் தயாரிப்பாளராக பணியாற்றிய பாண்டியன் பரசுராமன், முதல் முறையாக விஜய கணபதி பிக்சர்ஸ் சார்பில் பெரிய பட்ஜெட்டில் பிரமாண்டமாக இப்படத்தினைத் தயாரித்துள்ளார். இந் நிகழ்வினில் இயக்குநர் சசிக்குமார் பேசுகையில், ஃபிரீடம் மனதுக்கு நெருக்கமான படம், 1991 ல் நடந்த உண்மைக் கதை. நமக்குத் தெரியாத ஒரு கதை.

இப்படி ஒரு படம் எடுத்ததற்குப் தயாரிப்பாளர் பாண்டியனுக்கு நன்றி, எல்லோருக்கும் இந்தப்படம் பிடிக்கும் என்றார்.

## நடிகை ரேவதி இயக்கும் புதிய இணையத்தொடர்



ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளியாகி இருக்கும் இணையத் தொடர் 'குட் வொய்ஃப்'. இந்தத் தொடர் சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட 'குட் வைஃப்' என்ற தொடரின் தமிழ் வடிவம். பிரியாமணி மற்றும் சம்பத் ராஜ் நடித்திருக்கும் இந்தத் தொடரை ரேவதி இயக்கியுள்ளார். இது குறித்து பேசிய இயக்குனர் ரேவதி, இந்த கதை நம் தமிழ் நாட்டுக்கு தமிழ் பார்வையாளர்களுக்கு கொண்டுபோய் சேர்க்கக்கூடிய ஒன்றுதான்.

இதன் கதையை ஹலிதா மிக அற்புதமாக எழுதி இருந்தார். அதில் சில மாற்றங்கள் மட்டும் செய்துவிட்டு முழுக்க முழுக்க இயக்குநராக இந்த கதையை இயக்கி இருக்கிறேன் என்றார். நடிகை பிரியாமணி பேசுகையில், ரேவதி மேம் இயக்கப் போகிறார் என்றதும் உடனே சம்மதித்து விட்டேன் திரைப்பட மோ அல்லது வெப்சீரிஸோ உங்களுக்கு வரும் வாய்ப்புகளை விட்டுக் கொடுக்காதீர்கள். நான்காவது முறையாக நான் வழக்கறிஞர் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறேன் என்றார்.

## 'கயிலன்' முன்னோட்டம் வெளியீடு




BTK பிலிம்ஸ் B.T. அரசகுமார் தயாரிப்பில் அறிமுக இயக்குநர் அருள் அஜித் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் கயிலன். ஜூலை 25ம் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் இந்த திரைப்படத்தில் ஷிவதா, ரம்யா பாண்டியன், பிரஜின், மனோபாலா, ஞானசம்பந்தம், அபிஷேக் ஜோசப், அனுபமா குமார் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அமீன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு கார்த்திக் ஹர்ஷா, ஹரி எஸ்.ஆர். இசையமைத்திருக்கிறார்கள்.

இந்நிலையில், இந்த திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தயாரிப்பாளர் B.T. அரசகுமார் பேசுகையில், நாடக குடும்பத்தில் இருந்து சினிமாவிற்கு வந்தவன் நான்.

என்றாவது ஒருநாள் திரைத்துறையில் சாதிக்கலாம் என காத்திருந்தேன். ஆனால் தற்போது தான் முதல் முறையாக 'கயிலன்' திரைப்படத்தை தயாரித்திருக்கிறேன் என்றார். இயக்குநர் அருள் அஜித் பேசுகையில், இந்தப் படத்தின் பணிகள் தொடங்கும் போது தயாரிப்பாளர் என்னிடம், 'நீங்கள் ஒரு கமர்ஷியல் படத்தை எடுக்க உள்ளீர்கள். அதில் எங்கேனும் வாய்ப்பு கிடைத்தால் நல்லதொரு மெசேஜை சொல்லுங்கள் என்றார். இந்தப் படத்தில் ஒரு மெசேஜ் இருக்கிறது.

அதிலும் கிளைமாக்ஸில் ஒரு மெசேஜ் இருக்கிறது என்றார்.

## ஜூலை 11-ல் 'தேசிங்குராஜா 2'




இயக்குநர் எழில். கடந்த 2013 ம் ஆண்டு தேசிங்கு ராஜா படத்தை இயக்கினார். 12 வருடங்களுக்கு பிறகு தற்போது இதன் இரண்டாம் பாகத்தை இயக்கியுள்ளார். இன்பினிட்டி கிரியேஷன்ஸ் P ரவிச்சந்திரன் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தப்படத்தில் விமல் மற்றும் ஜனா இருவரும் முதன்மை வேடத்தில் நடிக்கிறார்கள். கதாநாயகிகளாக பூஜிதா பொன்னாடா, ஜூலி, ஹர்ஷிதா ஆகியோர் நடித்துள்ளனர். முக்கிய வேடங்களில் சிங்கம்புலி, ரவிமரியா, சாம்ஸ், ரோபோ சங்கர் என பெரிய நட்சத்திர பட்டாளமே இதில் நடித்துள்ளனர். வரும் ஜூலை 11ஆம் தேதி வெளியாக இருப்பதை முன்னிட்டு இந்தப்படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில் இயக்குனர் எழில் பேசுகையில், இந்த படத்தின் வேலைகளை முடித்துவிட்டு நான் இன்னொரு பட வேலைகளை கவனிக்க சென்று விட்டேன். ஆனால் இதன் தயாரிப்பாளர் ஒவ்வொரு விஷயத்திலும் கவனம் செலுத்தி அழகாக இதை முடித்துள்ளார். தேசிங்குராஜா படத்தின் வெற்றிக்கு மிக முக்கிய காரணமாக இருந்தது விமல். இந்த இரண்டாம் பாகத்தின் வெற்றிக்கும் அவர்தான் முக்கிய காரணமாக இருக்கப் போகிறார். இந்த படத்தில் ஸ்கிரிப்ட் வடிவமைப்பு வேற மாதிரி இருக்கும். மின்னல் மாதிரி போகும். ஒரு காமெடி சிரித்து முடிந்து உடனடியாக அடுத்த காமெடி வந்துவிடும். அவ்வளவு ஸ்பீடாக இருக்கும் என்றார்.

## கவுதம் கார்த்திக்கின் அடுத்த படம்




வேரூஸ் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் புதிய படத்தில் கவுதம் ராம் கார்த்திக் நடிக்கவுள்ளார். தனிஷ்தன் பெர்னாண்டோ, ராஜராஜன் கணநாசம்பந்தம், சஞ்சய் சங்கர் மற்றும் ஷைக் முஜீப் ஆகியோரால் தயாரிக்கப்படும் இந்த திரைப்படம், அறிமுகமான இயக்குநரான சூரியபிரதாப் இயக்கத்தில் உருவாகவிருக்கிறது.

கௌதம் கார்த்திக்குடன் இணைந்து, பாலிவுட் நடிகர் அபார்ஷக்தி குரானா நடிக்கிறார்.

இப்படத்தின் பூஜை சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது,

படப்பிடிப்பு பணிகள் விரைவில் தொடங்கவுள்ள இப்படத்தில் நாயகியாக பவ்யா த்ரிகா நடிக்கிறார். படம் பற்றி இயக்குநர் சூரிய பிரதாப் கூறியதாவது,

"'ROOT' எனும் இந்தக் கதை ஆரம்பத்திலிருந்தே எனக்கு ஒரு முக்கியமான கனவுப் பிராஜெக்ட். ஒரு கிரைம் த்ரில்லரை, அறிவியல் பின்னணியுடன், சேர்த்து உருவாக்கும் முயற்சி தான் இந்த படம் என்றார்.

## தமிழ் சினிமாவில் 'சுரேஷ் ரெய்னா'



புதிய பட தயாரிப்பு நிறுவனமான ட்ரீம் நைட் ஸ்டோரீஸ், தனது முதல் படைப்பான "புரொடக்ஷன் நம்பர் 1" மூலம் திரைப்பட உலகில் தனது கால் பதித்துள்ளது. அறிமுக இயக்குனர் லோகன் இயக்கும் இந்த படத்தில் இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா நடிக்கிறார். நிகழ்வில் பேசிய ரெய்னா, தனது தோழரான எம்.எஸ். தோனியும் இப்படத்தில் நடிக்க வாய்ப்புள்ளதா எனக் கேட்டபோது, "அவர் தான் அதுக்கு பதிலளிக்க வேண்டும என்றார்.

இந்த அறிமுக விழாவில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஆட்டக்காரரர் ஷிவம் டூபே மற்றும் எடிட்டர் மோகன், இயக்குநர் மோகன் ராஜா, தயாரிப்பாளர் பி. எல். தேனப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார். சந்தோஷ் நாராயணன் இசையமைக உள்ள இப்படத்துக்கு சந்தீப் கே. விஜய் ஒளிப்பதிவு செய்ய உள்ளார்.

## சர்வேதேச வில்வித்தை போடியில் தமிழ்நாடு சார்பாக கலந்து கொண்டு சிவகங்கை மாணவர்கள் சாதனை




**சிவகங்கை, ஜூலை 09-**
ஈரோட்டில் சர்வேதேச அளவிலான வில்வித்தை போட்டி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரி, தெழுங்கானா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து 300-க்கும் மேறப்பட்ட மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் தமிழ்நாடு சார்பாக சிவகங்கை மாவட்டத்திலிருந்து சிவன் ஆர்சரி அக்காடமி சார்பாக உரிமையாளர் பரமசிவம் மற்றும் பயிற்றுனர் சுரேஷ் சிங் தலைமையில் 15-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் 4 பிரிவிகளில் கலந்து கொண்டனர். இப்போட்டியில் மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் 17 தங்கம், 7 சில்வர், 5 வெங்களம் வென்று சிவகங்கை மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் சாதனை படைத்துள்ளனர்.

## நத்தம் பகுதி சிவாலயங்களில் பிரதோஷ விழா கோலாகலம்



**நத்தம், ஜூலை 09-**
திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் ஆனி மாத பிரதோஷ விழா நடந்தது. இதையொட்டி நந்தி சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. தொடர்ந்து மேளதாளம் முழங்க சுவாமி புறப்பாடும் நடந்தது.பின்னர் மூலவர் செண்பகவல்லி சமேத கைலாசநாதருக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

இதைப்போலவே நத்தம் அருகே குட்டூரில் உள்ள உண்ணாமலை அம்பாள் உடனுறை அண்ணாமலையார் கோவிலிலும் பிரதோஷ விழா நடந்தது.இதில் மூலவருக்கும், நந்திக்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகமும், தீபாராதனைகளும் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

### புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில்
## மருத்துவ சேவைகளை தொடங்கி வைத்தார் அமைச்சர் தங்கம் தென்னரசு



**அருப்புக்கோட்டை, ஜூலை 09-**
முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சுழி அருகே இலுப்பையூர் கிராமத்தில், ரூ.1.20 கோடி மதிப்பில் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்ட புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தலைமையில், அமைச்சர் தங்கம் தென்னரசு குத்துவிளக்கேற்றி மருத்துவ சேவைகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்.

பின்னர், மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ், பயன்பெறும் பயனாளிகளுக்கான மருந்து பெட்டகங்களையும், தாய்மார்களுக்கு தாய் சேய் நலப் பெட்டகங்களையும் அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கி பேசியதாவது:-

இந்திய அளவில் சுகாதாரத்தில் தமிழ்நாடு தான் முன்னிலையில் இருக்கிறது. நம்மை காக்கும் 48, இன்னுயிர் காப்போம், மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி மருத்துவம் போன்ற திட்டங்கள் அனைத்தையும் தமிழக அரசு தான் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக செயல்படுத்தி வருகிறது. மேலும், இலுப்பையூர் மற்றும் அதனைச் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் மருத்துவ சேவைகளுக்காக சுமார் 30 கி.மீ தூரமுள்ள திருச்சுழி, நரிக்குடி, கமுதி ஆகிய அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டியுள்ளதால், இப்பகுதியில் மருத்துவ சேவை வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்ற முக்கியத்துவத்தை பல முறை வலியுறுத்தி, தற்போது இலுப்பையூரில் ரூ.1.20 கோடி மதிப்பில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டுள்ளது.

இந்த புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தில் பிரசவ அறை, பிரசவ வார்டு, மருத்துவ அலுவலர் அறை, ஊசி போடும் அறை, மருந்து கட்டும் அறை, அவசர சிகிச்சை வார்டு, ஆய்வகம், மருந்தகம், தொற்ற நோய் சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 3250 சதுர அடி பரப்பளவில் சுகாதார நிலையம் உள்ளது. எனவே, மருத்துவ சேவைகளை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி கொள்ளுமாறு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், விருதுநகர் மாவட்ட சுகாதார அலுவலர் யசோதாமணி, வட்டாட்சியர், உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவப் பணியாளர்கள், பொதுப்பணித்துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருமங்கலம் அருகே
## ரூ.30 லட்சம் செலவில் சாலை அமைத்திட பூமி பூஜை: முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பங்கேற்பு



**திருமங்கலம், ஜூலை 09-**
திருமங்கலம் ஒன்றியத்தில் ரூ.30 லட்சம் செலவில் சாலை அமைத்திடுவதற்கான பூமி பூஜை விழாவில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பங்கேற்று பணிகளை தொடங்கி வைத்தார்.

திருமங்கலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அ.வலையப்பட்டி கிராமத்தில் இருந்து உள்ள புல்லமுத்தூர் சென்றிட 5 கி.மீ தூரம் சுற்றி செல்ல வேண்டிய நிலை இருந்துது. இதனால் அ.வலையப்பட்டியில் இருந்து புல்லமுத்தூர் செல்ல மெட்டல் சாலை அமைக்க வேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை வைத்திருந்தனர்.அதன் அடிப்படையில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் மெட்டல் சாலை அமைப்பதற்கான பூமி பூஜை நேற்று நடைபெற்றது.இதில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அம்மா பேரவை மாவட்ட செயலாளர் தமிழழகன், அம்மா பேரவை நிர்வாகி சுகுமார், ஒன்றிய செயலாளர் அன்பழகன், மீனவரணி மாவட்ட செயலாளர் சரவண பாண்டியன், வழக்கறிஞர் பிரிவு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் துரைப்பாண்டி பொதுக்குழு உறுப்பினர் சுமதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கல்பனா சுகுமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ராமேசுவரம் ராமநாதசுவாமி கோவிலில் ஆடித்திருவிழா ஜூலை 19-ல் தொடக்கம்
### 30-ம் தேதி சுவாமி-அம்பாள் திருக்கல்யாணம்



**ராமேசுவரம், ஜூலை 09-**
ராமேசுவரம் ராமநாதசாமி திருக்கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆடித்திருவிழா இந்த மாதம் 19-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

உலகப் புகழ்பெற்ற ராமேஸ்வரம் ராமநாதசாமி திருக்கோவிலில் ஆண்டுதோறும் தமிழ் மாதா ஆடி மாதத்தில் ஆடித்திருவிழா துவங்கும் இந்த ஆண்டுக்கான ஆடித் திருவிழா ஜூலை மாதம் 19ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி ஆகஸ்ட் மாதம் 4 ஆம் தேதியுடன் நிறைவு பெறுகிறது. திருக்கோவிலில் 17 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த திருவிழா நிகழ்ச்சியில் முதல் நாள் நிகழ்ச்சியான ஜூலை 19 ஆம் தேதி கொடியேற்றம் நிகழ்ச்சியும்,24 ஆம் தேதி ஆடி அமாவாசயை முன்னிட்டு ராமநாதசுவாமி, பருவத வர்த்தினி அம்மன் எழுந்தருளி அக்னி தீர்த்த கடலில் பக்தர்களுக்கு தீர்த்த வழங்கி அருள் பாலிக்கும் நிகழ்ச்சியும்,25 ஆம் தேதி இரவு சுவாமி, அம்பாள் வெள்ளி ரதத்தில் புறப்பாடாகி நான்கு ரத வீதியில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் நிகழ்ச்சியும்,27 ஆம் தேதி காலையில் சுவாமி அம்பாள் தேரோட்டத்தில் வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளிக்கும் நிகழ்ச்சியும், 29-ம் தேதி சுவாமி அம்பாள் மாலை மாற்றுதல் நிகழ்ச்சியும்,30-ம் தேதி ராமநாதசாமி பர்வத வர்த்தினி அம்மன் திருக்கல்யாணம் உற்சவ நிகழ்ச்சியும், ஆகஸ்ட் 4 ஆம் தேதி திருக்கோயிலின் உபகோவிலான கெந்த மாதன பர்வதம் பகுதியில் அமைந்துள்ள ராமர் பாதம் கோவிலுக்கு விருந்து வைபவங்களுக்கு செல்லும் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. மேலும் திருவிழா காண நிகழ்ச்சியை ஏற்பாடுகளை திருக்கோவில் இணை ஆணையர் செல்லத்துரை தலைமையில் திருக்கோவில் அலுவலர்கள் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.



● சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திருமாவளவன் சந்தித்து தமிழ்நாடு முழுவதும் பல்வேறு துறைகளின்கீழ் செயல்பட்டு வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் இனி "சமூக நீதி விடுதிகள்" என்று அழைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொண்டார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எஸ்.எஸ்.பாலாஜி, எம்.பாபு, முகமது ஷா நவாஸ், முன்னாள் அமைச்சர் கக்கனின் பேத்தி மீனாட்சி ஆகியோர் உள்ளனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தனது தேர்தல் சுற்றுப்பயணத்தின் 2-ம் நாளான நேற்று கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் நடை பயிற்சி மேற்கொண்டு பொதுமக்களை சந்தித்து பேசினார். அருகில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மற்றும் அ.தி.மு.க.வினர் உடனிருந்தனர்.

## வேன் மீது ரயில் மோதிய விபத்து:

# துணை முதல்வர் உதயநிதி இரங்கல்

சென்னை, ஜூலை 09-

கடலூரில் பள்ளி வேன் மீது ரயில் மோதிய கோர விபத்தில் 3 மாணவ - மாணவியர் உயிரிழந்த சம்பவத்துக்கு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், 'கடலூரில் பள்ளி வேன் மீது ரயில் மோதிய கோர விபத்தில் 3 மாணவ - மாணவியர் உயிரிழந்த செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

ஆயிரம் கனவுகளோடு பள்ளிக்கு சென்று கொண்டிருந்த இந்த மழலைகளின் மரணம் ஆற்றொணா துயரையும் வேதனையையும் தருகிறது.

இவ்விபத்தில் படுகாயமுற்றவர்களுக்கு முதல்வரின் உத்தரவின் பேரில் உரிய சிகிச்சைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. விபத்தில் பிள்ளைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்களுக்கு என்னுடைய ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது மாதிரியான விபத்துகள் இனியும் தொடராத வகையில் அனைத்து தரப்பிலிருந்தும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## மக்கள் தொகை கணக்கெடுப்பு:

# முதல்முறையாக பொதுமக்களே தங்கள் பெயரை சேர்க்கும் வசதி

புதுடெல்லி, ஜூலை 09-

மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது பொதுமக்கள் பெயரை சேர்க்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் 10 ஆண்டுகளுக்கு ஒருதடவை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்து வந்தது. கொரோனா பரவல் காரணமாக, கடந்த 2021-ம் ஆண்டு நடக்க வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பு நிறுத்தி வைக்கப்பட்டது. எதிர்க்கட்சிகளின் தொடர் கோரிக்கையை தொடர்ந்து, மக்கள்தொகை கணக்கெடுப்பு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 16-ந்தேதி, அரசிதழிலும் இது வெளியிடப்பட்டது. அதன்படி, இரு கட்டங்களாக மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. வீடுகளை கணக்கெடுக்கும்பணி, 2026-ம் ஆண்டு ஏப்ரல் 1-ந்தேதி தொடங்குகிறது. மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி, 2027-ம் ஆண்டு பிப்ரவரி 1-ந்தேதி தொடங்குகிறது. அத்துடன், சாதிவாரி கணக்கெடுப்பும் நடத்தப்படும்.

முதல்முறையாக டிஜிட்டல் கணக்கெடுப்பாக இது நடத்தப்படுகிறது. மேலும், முதல்முறையாக பொதுமக்களே தங்கள் பெயர்களை சேர்த்துக் கொள்ளலாம். அதற்காக, ஒரு தனியான இணைய தளம் தொடங்கப்படுகிறது. 2 கட்ட கணக்கெடுப்பிலும் அந்த இணையதளம் செயல்படும். அதில், பொதுமக்கள் தங்கள் பெயர்களை சேர்க்கலாம். மேலும், மக்கள் தொகை கணக்கெடுப்பாளர்கள் தங்களது ஆண்ட்ராய்டு, ஆப்பிள் செல்போன்களில் செல்போன் செயலிகளை பயன்படுத்தி, பொதுமக்களின் தரவுகளை திரட்டுவார்கள். அந்த தரவுகள், மின்னணு ரீதியாக மத்திய சர்வருக்கு அனுப்பப்படும். அதன் மூலம் விரைவிலேயே மக்கள்தொகை விவரங்கள் கிடைத்துவிடும். தரவுகள் பாதுகாப்புக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு, இந்தியாவின் 16-வது கணக்கெடுப்பு ஆகும். சுதந்திரம் பெற்ற பிறகு எடுக்கப்படும் 8-வது கணக்கெடுப்பு ஆகும். இப்பணியில், சுமார் 34 லட்சம் கணக்கெடுப்பு ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆங்கிலம், இந்தி மற்றும் பிராந்திய மொழிகளில் செல்போன் செயலிகள் மூலம் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. செயலியில் பதிவு செய்யப்படும் விவரங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணைய சர்வருக்கு நேரடியாக அனுப்பப்படும். மக்கள் தொகை விவரங்களை பெற முதல்முறையாக டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்த உள்ளது குறிப்பிடத்தக்கது.

# சுற்றுப்பயணத்தில் மக்களிடம் எழுச்சியை பார்க்க முடிந்தது

## எடப்பாடி பழனிசாமி பேட்டி

கோவை, ஜூலை 09-

சுற்றுப்பயணத்தில் மக்களிடம் எழுச்சியை பார்க்க முடிந்தது என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தலை கருத்தி கொண்டு அ.தி.மு.க. தற்போதே தேர்தல் பிரசார பணிகளை தொடங்கியுள்ளது. அதன் ஒரு பகுதியாக தமிழகம் முழுவதும் மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணத்தை அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மேற்கொள்ள இருக்கிறார். இதன்படி, மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணத்தை எடப்பாடி பழனிசாமி நேற்று முன்தினம் கோவை மாவட்டத்தில் தொடங்கினார்.

இந்நிலையில், எடப்பாடி பழனிசாமி நேற்று கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் நடை பயிற்சி மேற்கொண்டு எடப்பாடி பழனிசாமி, பொது மக்களை சந்தித்து பேசினார் .

தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த எடப்பாடி பழனிசாமி கூறியதாவது, தொடக்கத்தில் இருந்தே தேர்தல் சுற்றுப்பயணம் இரவு முடிகின்ற வரை மக்களிடம் எழுச்சியை பார்க்க முடிந்தது.

இந்த எழுச்சியே எங்களுக்கு நிச்சயமாக வெற்றியை தேடித்தரும் என்று நம்புகிறோம். எங்களுடைய கூட்டணிக்கு பல கட்சிகள் வந்து சேர இருக்கின்றன.நிச்சயமாக பலம் பொருந்திய கூட்டணியாக இருக்கும்.

அ.தி.மு.க.வை பொறுத்த வரைக்கும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றுவோம். மக்களுக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு வந்து காலத்தில் 4 லட்சத்து 38 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள். சுமார் 1 லட்சத்து 36 ஆயிரம் கோடி வருவாய் அதிகரித்து இருக்கிறது. வருவாயும் அதிகரித்து இருக்கிறது. கடனும் வாங்குகிறார்கள். புதிய திட்டங்கள் எதுவும் இல்லை என்றால் இடையில் என்ன நடக்கிறது. அதற்கு தான் விசாரணை கமிஷன்.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில், ஆட்சிக்கு வந்தால் 4லட்சம் அரசு பணியிடம் நிரப்பப்படும் என்று அறிவிப்பை கொடுத்தார்கள். தி.மு.க. 2021-ல் ஆட்சிக்கு வந்த பிறகு இப்போது வரை 50 ஆயிரம் பேர்களுக்கு தான் புதிதாக வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி என்றால் தி.மு.க. தேர்தல் அறிக்கை பொய் அறிக்கையாகத்தான் பார்க்கப்படுகிறது.

அ.தி.மு.க. ஆட்சி இருந்த நீண்டகாலமாக தூர்வாரப்படாமல் இருந்த அணைகளை எல்லாம் தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து வண்டல் மண்ணை அள்ளி செல்லாம் என்று அறிவிப்பு செய்தோம். ஆனால் ஆட்சி மாற்றத்திற்கு பிறகு இது வரை அந்த அணையை தூர்வாருவதற்காக எனக்கு கிடைத்த தகவல்படி இல்லை என தெரிவித்தார்.

# பள்ளி வேன் மீது ரயில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

கைது செய்துள்ளனர்.

### போக்குவரத்து பாதிப்பு

தீவிர விசாரணைக்கு பின்னரே விபத்துக்கான முழு காரணம் பற்றி தெரிய வரும் என்று கூறப்படுகிறது. கடலூர், சிதம்பரம், மயிலாடுதுறை, தஞ்சை, விழுப்புரம், சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்ல வேண்டிய ரயில்கள் இந்த வழியே சென்று வரும் நிலையில், அந்த வழியே செல்லும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இன்டர்லாக்கிங் அமைப்பு இல்லாததே விபத்துக்கு காரணம் என தகவல் தெரிவிக்கப்பட்டது. சிக்னலால் கட்டுப்படுத்தப்படும் ஒருங்கிணைந்த அமைப்பே இன்டர்லாக்கிங். கேட் திறந்திருந்தால் 1 கி.மீ முன்னதாக இருக்கும் சிக்னலில் சிவப்பு விளக்கு எரியும். சிக்னலைப் பார்த்து ஓட்டுநர் ரயிலை நிறுத்திவிடுவார் என்பதால் விபத்துகள் தவிர்க்கப்படும். செம்மங்குப்பம் கேட்டில் இன்டர்லாக்கிங் இல்லாததால் கேட் திறந்திருந்ததை ஓட்டுநரால் அறிய முடியவில்லை என்று கூறப்படுகிறது.

### படுகாயங்களுடன்...

நான் இன்டர்லாக்கிங் ('N on Interlocking') ரயில்வே கேட் என்றால், அதனை மூடுவதற்கு தொலைபேசி மூலமே தகவல் தரப்படும். தொலைபேசி மூலம் தகவல் அளித்து கேட் மூடியதை உறுதிப்படுத்திய பின்னரே ரயில் செல்வதற்கு சிக்னல் அளிக்கப்படும். செம்மங்குப்பத்தில் ரயில்வே கேட்டை மூடிவிட்டதாக உறுதி அளித்தபின், பள்ளி வேனை மட்டும் கேட் கீப்பர் அனுமதித்ததால் இந்த விபத்து நடந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. பள்ளி வேனில் டிரைவர் மற்றும் 4 மாணவர்கள் பயணித்துள்ளனர். அந்த கோர விபத்தில் சிக்கி மாணவி சாருமதி(15), மாணவர் நிமலேஷ் (10) நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர். மாணவர்கள் செழியன், விஷ்வேஸ் ஆகிய இருவரும் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தநிலையில் மேல் சிகிச்சைக்காக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த செழியன் என்ற மாணவர், சிகிச்சை பலனில்லாமல் உயிரிந்தார். இதனால் பலி எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது.

### மின்சாரம் பாய்ந்து...

பள்ளி வேனை இயக்கிய டிரைவர் சங்கரும் படுகாயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் செம்மங்குப்பம் அருகே பள்ளி வேன் மீது ரயில் மோதியபோது ரயில்வே கேட் அருகே நின்றிருந்த அண்ணாதுரை என்பவர் மீது மின் கம்பி அறுந்து விழுந்ததில் மின்சாரம் பாய்ந்து, படுகாயங்களுடன் அவர் சிகிச்சை பெற்று வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.செம்மங்குப்பத்தில் பள்ளி வேன் மீது ரயில் மோதி விபத்தில் சிக்கிய தொண்டமாநத்தத்தை சேர்ந்த சாருமதி (11-ம் வகுப்பு), அவரது தம்பி செழியன் (10-ம் வகுப்பு) ஆகியோர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### முதல்வர் வேதனை...

இதற்கடையே அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நபர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளித்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் , கடலூர் மாவட்டம், செம்மங்குப்பத்தில் நேற்று (8-7-2025) காலை நடந்த மோசமான ரயில் விபத்தில் விலை மதிப்பில்லாத 3 இளம் பிள்ளைகளின் உயிர் பறிபோன செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன். வாழ வேண்டிய வயதில் உயிரிழந்த அந்தத் துளிர்களின் மரணம் என்னை ஆற்றொன்னாத் துயரில் ஆழ்த்துகிறது.

### சிறப்பான சிகிச்சை....

விபத்தில் உயிரிழந்த செல்வன் நிமிலேஷ் (வயது 12), த/பெ விஜயசந்திரகுமார்) மற்றும் செல்வி சாருமதி (வயது 16), த/பெ .திராவிடமணி) ஆகிய இருவரின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விபத்தில் காயமடைந்து கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நபர்களுக்கும் சிறப்பான சிகிச்சை அளித்திடவும் அறிவுறுத்தியுள்ளேன். மேலும் இந்த விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 5 லட்சம் ரூபாய் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன். பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என தெரிவித்துள்ளார்.



● மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு, பாதுகாப்பு பணிகள் குறித்து அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு பி.மூர்த்தி ஆகியோர் நேற்று ஆய்வு செய்து பார்வையிட்டனர். அருகில் மாவட்ட கலெக்டர் கே.ஜே.பிரவீன்குமார், மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா, அறங்காவலர் சண்முகசுந்தரம் ஆகியோர் உடனிருந்தனர்.



● தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 44 உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை நேற்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் முன்னாள் படைவீரர் நலத்துறை அறிவிப்புகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறுவாழ்வுத்துறை செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர், சிறப்பு செயலாளர்சஜ்ஜன்சிங் ரா சவான் கலந்து கொண்டனர்.

## நெல்லையப்பர் கோவிலில்

# ஆனித்தேரோட்டம் கோலாகலம்

திருநெல்வேலி,ஜூலை09-

நெல்லை நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோவிலில் ஆனிப் பெருந்திருவிழா திருத்தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

நெல்லையப்பர் காந்திமதி அம்மன் கோவிலில் ஆனிப் பெருந்திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இந்த திருவிழா கடந்த 30 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 10 நாள்கள் திருவிழா நடந்து வருகிறது. திருவிழாவின் ஒவ்வொரு நாளும் காலை மாலை இரு வேளைகளிலும் சுவாமி அம்பாள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றனர்.

விழாவின் சிகர நிகழ்வான ஒன்பதாம் திருநாளான நேற்று திருத்தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதனை ஒட்டி அதிகாலை நடை திறக்கப்பட்டு சுவாமி அம்பாளுக்குச் சிறப்பு அபிஷேக அலங்காரம் செய்யப்



பட்டு தேருக்கு எழுந்தருளினர். இதனைத் தொடர்ந்து தமிழக சட்டப்பேரவை தலைவர் அப்பாவு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆகியோர் வடம் பிடித்து தேரை இழுத்து விழாவைத் தொடங்கி வைத்தனர். பின்னர் பக்தர்கள் சிவாய நமக, நமச்சிவாய கோஷங்கள் விண் அதிர தேர் நான்கு ரத வீதிகளிலும் பவனி வந்தது. இதனை அடுத்து அம்பாள் தேரும் இழுக்கப்பட்டது. தேர்த் திருவிழாவையொட்டி பாதுகாப்புப் பணியில் 2000 ஆயிரம் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் ஆவுடையப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட்புரூஸ், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அப்துல்வகாப், ரூபி மனோகரன், நயினார் நாகேந்திரன், மாவட்ட கலெக்டர் சுகுமார், மேயர் ராமகிருஷ்ணன் உள்பட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.